# ஆரம்பக் கல்வி

டிஸம்பர் 1957





1318
1318
28 DEC 1957
MADRAS
JL
T15ᵐ211,N46
N57:18:12
186324

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI" OFFICE

2-65, BROADWAY, MANNADY P. O., MADRAS-1.

POST BOX No. 1818.

## "ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் எமது "**புதுமுறை சங்க வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50-க்குக் குறையாமல் இதர பாடபுத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M. O. மூலம் அனுப்பவும்.

### ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள்

### புதுமுறை சங்க வாசகம்

**பி. வீரராகவன்.**

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 4 0 | 8 | 4–5–'55 |
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 8 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 23 | 19–5–'54 |

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1–0–0 அனுப்பவும்.



# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள் முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 18 | டிஸம்பர் 1957 | இதழ் 12


# பாடப் புத்தகங்களும் தேசிய மயமும்

கல்வியிலும், கலையிலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும், விஞ்ஞானத்திலும் தலை சிறந்த நாடுகளென போற்றப்படும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேல்நாட்டு ஜனநாயக நாடுகளில், அறிவையும், அறிவுக்கு அடிப்படையாய் உள்ள கல்வியையும், கல்விக்கு ஆதாரமாயுள்ள பாடப் புத்தகங்களையும் தேசிய மயமாக்கப்படவில்லை. சுருங்கக் கூறுமிடத்து மேல் நாடுகளில் ரஷ்யாவைத் தவிர எந்த நாட்டிலும் கல்வித் துறையில் அரசாங்கம் தலையிடுவதே இல்லை—தலையிட முடியாததால் என்ற காரணத்தால் அல்ல, கல்வியில், அரசாங்கம் தலையிட்டால் படிப்புத் திறன் குறைந்து அறிவு, நாட்டில் [illegible] விடும் என்ற காரணத்தால். ஏனோ இந்த அடிப்[illegible] நம் நாட்டு ஆட்சிப் பீடத்திலுள்ள ஆட்சி[illegible]ளர்களுக்குப் புரியவில்லை.

கோடிக் கணக்கான பண வருவாயுள்ள இரயில்வேக்கள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், மின்சார உற்பத்தி சாதனங்கள், உர உற்பத்தி செய்தல், நூல் உற்பத்தி செய்யும் மில்கள் போன்ற, பெரிய தொழில்களை தேசிய மயமாக்குவதில் நியாயமும், பொருள் வருவாயும் உண்டு. ஆனால், அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாய் உள்ள பாடப் புத்தகங்களை தேசிய மயமாக்குவதில், பொருளாதாரத் துறையில் கணிசமான இலாபம் இல்லை, நாட்டில் அறிவு வளர்ச்சிக்கான பயனும் இல்லை. வேலை இல்லாத் திண்டாட்டம் தான் அதிகப்படும். சுதந்தரம் வந்த பிறகு நம் நாட்டில் வேலையில்லாக் கஷ்டத்தாலும், வாழ்க்கை வசதியில்லாத துன்பத்தாலும், ஆயிரக் கணக்கான மக்கள் தற்கொலை செய்துகொள்ளும் செய்தியை அன்றாடம் பத்திரிகைகளில் பார்க்கின்றோம். பாடப் புத்தகங்கள் தேசிய மயமாக்கப்பட்டால், ஆயிரக் கணக்கான பாட நூல் ஆசிரியர்களும், அச்சுத் தொழிலாளர்களும், நூல் பிரசுர நிலையத்தில் வேலை செய்யும் பல குமாஸ்தாக்களும், வேலை இல்லாமல் கஷ்டப்படுபவர் பட்டியலில் சேர்ந்து, வருமையால் கஷ்டப்படவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

இதுவன்றி பொது மக்களும், பிள்ளைகளும் பிரசுரகர்த்தர்களும் பலவகையில் பாதிக்கப்படுகிறார்கள். சமீபத்தில் பாடப் புத்தகங்களை தேசிய மயமாக்கக் கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் முறையில், பல பத்திரிகைகளின் அபிப்பிராயங்களையும், பொது மக்களின் கூட்ட நிகழ்ச்சிகளையும், சமீபத்தில் நடந்த பாடநூல் ஆசிரியர் மாநாட்டின் கருத்துரைகளையும், நமது பத்திரிகையில் சேகரித்துப் பிரசுரித்துள்ளோம், பொது மக்களின் கவனத்திற்காக.

சமீபத்தில் நடந்த டெல்லி சட்டசபைக் கூட்டத்தில், மத்திய சர்க்காரின் கொள்கை பாடப் புத்தகங்களை தேசிய மயமாக்குவது தானா? என்று கேட்டதற்கு, கல்வி மந்திரி, அப்படியொன்றும் இல்லை, தேசிய மயமாக்கும் பிரச்சினை அந்தந்த மாகாணங்களைப் பொருத்தது என்று சொல்லிவிட்டார்.

தற்போது பீகார், பஞ்சாப், இராஜஸ்தான் முதலிய மாகாணங்களில் சில பாடப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிட்டு பிரசுரம் செய்து பார்த்தன. அதன் விளைவு பிள்ளைகளுக்கே பாடப் புத்தகங்கள் உரித்தான காலத்தில் கிடைக்கவில்லையென்றும், பிரசுரிக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் கவர்ச்சிகரமாக இல்லாமல், விலையும் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறதென்றும், புத்தகங்களிலும் அறிவு வளர்ச்சிக்கான சிறந்த பலவித கருத்துக்கள் சேர்க்கப்படவில்லையென்றும் குறை கூறப்பட்டு வருகின்றன.



இந்த பாட நூல் தேசிய முறையைக் கைவிடவேண்டுமென்று அந்தந்த சட்ட சபையில் பேசப்பட்டு வருகின்றது. அதற்கான காரணங்களை கீழே சுருக்கமாகக் கொடுக்கலாம்.

(1) தமிழ்நாடு ஒன்றாயினும், ஜில்லாவிற்கு ஜில்லா மக்கள் பண்பு, அறிவு வளர்ச்சி, கல்வித் திறன், சில ஜில்லாக்களில் குறைந்தும், சில ஜில்லாக்களில் அதிகமாயும் இருந்து வருகிறது. அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்ட சில புத்தகாசிரியர்களால் எழுதப்படும் பாடப் புத்தகங்களும் ஒரே மாதிரியான கருத்தும் மொழி வழியும் (Regimentation of thoughts and Language) அமையும். பல திறப்பட்ட கருத்துக்களுக்கும் நடைகளுக்கும் இடமில்லாமல் போய்விடும்.

(2) தற்போது 1,500 பாட நூல் ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியமில்லாமல் போய்விடும். அதன் காரணமாக பல நூல்கள் ஆசிரியர்களால் எழுதப்படாமல், அவர்கள் திறமை தடை படுவதுடன், நாட்டில் நல்ல கருத்துள்ள புத்தகங்கள் நடமாடுவது நின்றுவிடும். இதன் காரணமாகவே நமது நாட்டில் பெரிய மாகாணமாகிய பம்பாய் மாகாணம் பாடப் புத்தகங்களை தேசிய மயமாக்கும் கொள்கையைக் கைவிட்டுவிட்டது.

(3) நமது ஜனநாயக சர்க்காரில் கட்சியின் அடிப்படையிலேயே ஆட்சிப் பீடங்கள் அமைந்து, அரசாங்க ஆட்சி நடத்தப்படுகிறது. ஜனநாயக ஆட்சியில், ஆட்சிப் பீடங்கள், கட்சியின் அடிப்படையிலேயே பல கட்சிகள் மாறுவது இயற்கை. அப்படி மாறும்பொழுது ஆட்சிகள் நடத்தும் கட்சியைச் சார்ந்த கொள்கைகள், அரசாங்கம் ஒரு குறிப்பிட்டக் கட்சிக்காரர்களிடம் இருப்பதால், தங்கள் கட்சியின் கொள்கைகளைப் பாடப் புத்தகங்களில் புகுத்த, நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ வசதிகள் ஏற்படும். தங்களை அறியாமலேயே அரசியல் கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் நுழையும். அப்படி நுழைந்தால் கல்வித் துறையில் அரசியல் புகுந்து, கல்வித் தரம் குறைந்து கல்வியின் வளர்ச்சி சீர்கேடடையும்.

(4) அப்படி அரசாங்கமே பாடப் புத்தகங்களை பிரசுரம் செய்வதால் ஒரு கணிசமான அளவுக்கு இலாபம் கிடைக்குமா என்று ஆராய்ந்தால், அப்படி பிரமாதமான இலாபம் ஒன்றும் கிடைப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக, சென்னை அரசாங்கமே பாடப் புத்தகங்களையும் பிரசுரம் செய்யுமேயானால், சுமார் ஐம்பது லட்சத்துக்கு வியாபாரம் நடக்கலாம். அதில் சுமார் 10 அல்லது 15% லாபம் கிடைக்கும் என்று வைத்துக்கொண்டால்,

5 அல்லது 7 லட்சம் இலாபம் கிடைக்கலாம். இந்த ஒரு இலாபம் ஒரு பிரமாதமான இலாபம் அல்ல, நமது அரசாங்கத்திற்கு.

தற்போது வருமானவரி (Income tax), விற்பனை வரி (Sales tax), போன்ற வரிகளால் புத்தகப் பிரசுரகர்த்தர்களாலும், காகித விற்பனையாளர்கள் போன்ற புத்தக சம்பந்தப்பட்ட பல தரப்பட்ட வியாபாரிகளால் சுமார் 3 லட்சத்துக்கு மேல் மத்திய அரசாங்கத்திற்கும், சென்னை அரசாங்கத்திற்கும் வரிகள் கொடுக்கப்படுகின்றன. இந்தத் தொகைக் கழிக்கப்பட்டால், சுமார் சென்னை அரசாங்கத்திற்குக் கிடைக்கப்போவது நிகரமாக 3 அல்லது 4 லட்சத்துக்கு மேல் கிடைக்காது என்று நம்புகிறோம்.

ஒரு கவளச் சாதத்தால் யானையின் பசி அடங்கிவிடாது. ஆனால், அதே ஒரு கவளச் சாதம் கோடிக் கணக்கான எறும்புகளைப் போஷிக்கும். அதுபோல, இந்த 3 லட்ச ரூபாய் இலாபம் ஆயிரக் கணக்கான மக்களை வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து காப்பாற்றும். எந்த வகையில் பார்த்தாலும், அரசாங்கத்திற்கும் கல்வித் துறைக்கும், பொது மக்களுக்கும் நஷ்டக் கணக்கைக் காட்டுகின்றதே ஒழிய, போற்றக்கூடிய நன்மை எதுவும் காணோம்.

(5) பொதுவாக தற்போது இலக்கியம், விஞ்ஞானம், பொது அறிவு, நல்ல கவிதைகள், கட்டுரைகள், மலிவுப் பதிப்புகள் ஆயிரக் கணக்கில் வெளியிடும் ஊக்கம் நாளடைவில் குறைந்து, நாட்டின் மக்களின் தரத்தையும், கல்வியின் வளர்ச்சியையும் பொதுவாகப் பாதிக்கும். மேற்குறித்தக் காரணங்களால் நமது அரசாங்கத்தாரை, குறிப்பாக, கல்வி அமைச்சரை, பாடப் புத்தகங்களைத் தேசிய மயமாக்கும் முயற்சியைக் கைவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## பாடப் புத்தக ஒழுங்கீனத்தை ஒழிப்பது எப்படி ?

ஆனால் நமது கல்வி மந்திரி, அரசாங்கமே பாடப் புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு ஓர் முக்கிய காரணம், பாடப் புத்தகங்கள் வைப்பதில் பல ஒழுங்கீனங்கள் (Corruption) இருப்பதாக அறிவித்திருக்கின்றார். அந்தக் காரணம் ஓர் அளவு உண்மை. அந்த ஒழுங்கீனத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் முற்பட்டால் உடனடியாக ஒழித்துவிடலாம். நோய்க்கு மருந்து தரவேண்டுமே ஒழிய, நோய்க்காக நோயாளியையே ஒழித்துவிடக்கூடாது.



நமது தமிழ் நாட்டில் சுமார் 1,000 உயர்நிலைப் பள்ளிகளும் (High Schools), 20,000 ஆரம்பப் பள்ளிகளும் (Ele. Schools) இருக்கின்றன. இதில் 500 உயர்நிலைப் பள்ளிகளும் 10,000 ஆரம்பப் பள்ளிகளும் தனிப்பட்டோர் நிர்வாகத்தில் (Private Management) நடத்தப்படுபவை. மீதமுள்ள சுமார் 500 உயர்நிலைப் பள்ளிகள், 10,000 ஆரம்பப் பள்ளிகள், ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சென்னை கார்ப்பரேஷன் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களால் நிர்வகிக்கப்படுபவை. தனிப்பட்டோர் நிர்வாகத்திலுள்ளோர் பாடசாலைகளில் பாடப் புத்தகங்களை அந்தந்த நிர்வாகிகளும், தலைமை ஆசிரியர்களும் தங்கள் பிள்ளைகளின் கல்வித் திறனுக்கேற்ப, பாடப் புத்தகங்களைத் தாங்களே பொறுக்கி வைத்துக்கொள்கிறார்கள். ஆதலால், அங்கு லஞ்சம் கொடுக்கவேண்டியவை போன்ற ஊழல்கள் (Corruption) ஏற்பட இடமே கிடையாது. வேண்டுமானால் குறிப்பிட்டப் பாடசாலைகளுக்கு நன்கொடையாக (Donation) சிறு தொகை கொடுக்க சந்தர்ப்பம் நேரிடலாமே ஒழிய வேறு விதமான குறிப்பிடத்தக்கஒழுங்கீனங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. படிப்புத் திறனும்பொது ஸ்தாபன பாடசாலைகளை விட எயிடட் பள்ளிகளில் திறன் அதிகரித்திருப்பதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. இதை அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிறது.

அனால் ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சென்னை கார்ப்பரேஷன் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதிக்கத்தில் நூற்றுக் கணக்கான பாடசாலைகளுக்குப் புத்தகம் வைக்கும் பொறுப்பு புத்தகக் கமிட்டிகளுக்கும், முனிசிபல் தலைவர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயமாக ஒரு பாடசாலைக்குப் புத்தகம் வைக்கும் அதிகாரம், எயிடட் பள்ளிகளைப் போல் அந்தந்தப் பாடசாலைகளின் தலைமையாசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டுமே ஒழிய, முனிசிபல் தலைவர்களுக்கும், ஜில்லா போர்டு கமிட்டிகளுக்கும் புத்தகத்தை வைக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது முற்றிலும் தவறு. பெரும்பாலும் பொது ஸ்தாபனங்களில் தேர்ந்தெடுக்கப்படும் பிரமுகர்கள் அனுபவமுள்ளவர்களாகவும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இருக்கலாம்—பல துறைகளில். ஆனால், கல்வித் துறையில் ஆசிரியர்களைப் போன்ற அனுபவம் மிக்கவர்கள் என்று சொல்வதற்கில்லை. நமது கல்வி மந்திரி, கல்வி இலாகாவை நடத்த ஆற்றல் மிக்கவராக இருக்கலாம். ஆனால், பாடத் திட்டத்தை அமைப்பதற்கும் அனுபவமுள்ள ஆசிரியர்களைக் கொண்டுதானே திட்டம் தீட்டுகிறார்! அதைப்போல முனிசிபல் தலைவர்களும், ஜில்லா போர்டு கமிட்டி மெம்பர்களும் பாடசாலை நிர்வாகத்தை நடத்தலாம். ஆனால், பாடப் புத்தகங்களை

அந்தந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அமைக்கும் பொறுப்பை அவர்களிடம் விட்டது அரசாங்கத்தின் தவறு அல்லவா? அதன் காரணமாகவே நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பல ஊழல்கள் மலிந்துவிட்டன. இதை அதிகமாக விளக்கத் தேவை இல்லை யென்று கருதுகிறோம்.

தற்போது ஜில்லா போர்டுகளும் கலைக்கப்பட்டுவிட்டன. ஆதலால் உடனடியாக அரசாங்கத்தார், எயிடட் பள்ளி ஆசிரியர்களுக்குத் தனித்தனியே, பாடசாலைகளுக்கு தங்கள் இஷ்டம்போல் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுத்திருப்பதைப் போல ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சென்னை கார்ப்பரேஷன் ஆதிக்கத்திலுள்ள பாடசாலைகளுக்கு, அந்தந்தத் தலைமையாசிரியர்களே தங்கள் பாடசாலைக்குத் தகுந்தாற் போல் பாடப் புத்தகங்களை அமைத்துக்கொள்வதற்கான உரிமையை கொடுக்கும் வண்ணம் ஓர் உத்திரவைப் (Government G. O.) பிறப்பிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம். இதனால் பாடப் புத்தகங்களை வைப்பதில் ஏற்படும் லஞ்ச ஊழல், பொது ஸ்தாபன நிர்வாகத்திலிருந்து அறவே ஒழிந்துவிடும். கனம் கல்வி மந்திரி சொன்ன குறை, ஒழுங்கீனம் உடனடியாக நீக்கப்பட்டுவிடும். இதைக் கல்வி மந்திரி செய்வாரா?

---

## சம்பள உயர்வு

ரெயில், தபால் முதலிய டெல்லி சர்க்கார் இலாகாக்களில் வேலை செய்கிற சிப்பந்திகளுக்கு ரூ. 5 சம்பள உயர்வு கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது!

ரூ. 250–க்கு குறைந்த வருமானமுள்ள ஊழியர்களுக்கு இந்த சம்பள உயர்வு கிடைக்கும் என்று டெல்லி நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்தார்.

ஊழியர்களின் சம்பளம் அதிகரித்து, வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அவர்களுக்குப் போதிய சம்பளம் கிடைத்து கவலையில்லாமல் வாழ்க்கை நடத்தினால்தான் சர்க்கார் வேலை சிறப்பாக நடக்கும் என்பது தெளிவு!

### ஓரவஞ்சனை

ஆனால் ஒரு விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும். இப்பொழுது கொடுக்கப்படுகிற சம்பள உயர்வு டெல்லி (மத்திய) சர்க்கார் சிப்பந்திகளுக்கு மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது! அதாவது சென்னை அரசாங்க ஊழியர்கள், வாத்தியார்கள் ஆகியோருக்கு சம்பள உயர்வு இல்லை!

அதன் விளைவு என்ன என்பதைப் பாருங்கள். ஒரு கிராமத்தில் தபால்காரருக்கு ரூ. 95 மாதச் சம்பளமும், வாத்தியாருக்கு ரூ. 55 மாதச் சம்பளமும் கிடைக்கிறது. வாத்தியாரைப் போல தபால்காரருக்கு $1\frac{1}{2}$ பங்கு சம்பளம்!

அதை சரியான சம்பள விகிதம் என்றோ, நியாயமான ஏற்பாடு என்றோ சொல்ல முடியுமா? தபால்காரரை விட வாத்தியாருக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டாமா?

ஒரே வேலை செய்கிற டெல்லி சர்க்கார் குமாஸ்தாவுக்கும், ராஜ்ஜிய சர்க்கார் குமாஸ்தாவுக்கும் ஒரேமாதிரி சம்பளம் இல்லை. சென்னை சர்க்கார் குமாஸ்தாவைப் போல $1\frac{3}{4}$ பங்கு சம்பளம் டெல்லி சர்க்கார் குமாஸ்தாவுக்குக் கிடைக்கிறது! இந்த சம்பள வித்தியாசம் அதிகரித்து வருகிறது!

### உள்ளக் குமுறல்

இவ்வாறு டெல்லி சர்க்கார் சிப்பந்திகளுக்குத் தனிச் சலுகைகள் கிடைப்பது குறித்து ஏனைய ஊழியர்களின் உள்ளம் குமுறுகிறது! "ஓரவஞ்சனை ஏன்? நாங்கள் கீழ்த் தரமாகப் போய்விட்டோமா?" என்று ராஜ்ஜிய அரசாங்க சிப்பந்திகள் அலறுகிறார்கள்!

அந்த அலறலைக் கேட்டு ஆவன செய்வது அவசியம். டெல்லி சர்க்கார், அதன் சிப்பந்திகளை மட்டும் கவனிப்பது அநியாயம்! தமிழ் நாடு முதலிய ராஜ்ஜியங்களிலிருந்து வரி வசூல் செய்கிற பணத்தைக் கொண்டுதான் டெல்லி சர்க்கார் நடக்கிறது! ஆகையால், இந்தியா முழுவதிலும் சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஒரே சீரான சம்பள விகிதத்தை நிச்சயித்து, ஓரவஞ்சனை இல்லாமல் நடத்தவேண்டிய பொறுப்பு டெல்லி சர்க்காருக்கும் உண்டு!

—தி. த.

# சர்க்கார் பாடப்புத்தக பிரசுர திட்டத்தைக் கைவிட வேண்டுகோள்

## பாடப் புத்தக ஆசிரியர் மாநாட்டில் ஏகோபித்த கோரிக்கை.

அரசாங்கத்தாரே பள்ளிக்கூட பாட புத்தகங்களை வெளியிடுவதென்ற முடிவை கைவிடுமாறு வேண்டிக்கொள்ளும் நோக்கத்துடன் சர். பி. டி. ராஜன், எம். எல். சி. தலைமையில் செயின்ட் மேரிஸ் ஹாலில் பாட நூல் ஆசிரியர் மகாநாடு ஒன்று 16-12-57 அன்று நடந்தது.

பள்ளிக்கூட பாட புத்தகங்களைத் தாங்களே வெளியிட அரசாங்கத்தார் செய்திருக்கும் முடிவு பொதுவாகக் கல்வியின் தரத்தையும் குறிப்பாகத் தமிழ் மொழியின் வளர்ச்சியையும் குறைக்கக் காரணமாக இருப்பதோடு ஆயிரக்கணக்கான பாடநூல் ஆசிரியர்களின் நலத்தையும் பாதிக்கக் காரணமாக இருப்பதால் அம்முடிவை கைவிடுமாறு அரசாங்கத்தாரை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோம் என்பதாக மாநாட்டினர் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர்.

இம்மாநாட்டை திரு. டி. பி. சீனுவாச வரதன் எம். எல். சி. திறந்து வைத்தார்.


மாநாட்டில் மற்றும் பல பெரு மக்களும், எழுத்தாளர்களும் கலந்துகொண்டு பாடநூல் ஆசிரியர்களின் கோரிக்கையை ஆதரித்துப் பேசினார்கள்.

திரு. டி. பி. சீனுவாச வரதன் பேசுகையில் பாட புத்தகங்களை அரசாங்கமே வெளியிடுவதால் தரம் ஒருகாலும் உயராது—குறையத்தான் செய்யும் என்று கூறினார். கட்சி அரசியல் இயங்குகின்ற நமது நாட்டில் இம்மாதிரி அரசாங்கம் கல்வித்துறையில் தலையிடுவதானது சமூகத்துக்கே அபாயமாகும் என்று அவர் சொன்னார்.

பாட நூல் ஆசிரியர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்காவிடில் அதற்காகக் கிளர்ச்சியில் ஈடுபடாமல் பொறுத்துக்கொள்ளுவோம். நான்கைந்து ஆண்டுகளான பின்னாகிலும் அரசாங்கம் நம்மிடமே வந்து சேரும் என்றும் திரு சீனுவாச வரதன் எடுத்துரைத்தார்.

### மேலிடத்திலும் ஊழல் பரவும்

திரு. பி. டி. ராஜன் பேசுகையில் இன்றைய பாடப் புத்தக பிரசுரம் வினியோகம் ஆகியவற்றில் லஞ்ச ஊழலுக்கு இடம் இருப்ப



பாடப் புத்தகங்களை தேசிய மயமாக்கும் திட்டத்தைக் கண்டித்து சென்னை செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் 16-12-57 அன்று நடைபெற்ற பாடநூல் ஆசிரியர் மாநாட்டின்போது எடுத்த படம்.

தாகக் கூறி அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்று நடத்துவதால் மேலிடத்திலும் இந்த ஊழல் பரவும் என்று கூறினர்.

### அறிவாளிகளின் ஆலோசனை

கல்வி பற்றிய விஷயங்களில் முடிவாக நிர்ணயம் செய்வது சட்ட சபையாக இருக்கக்கூடாது என்றும் அறிவாளிகளின் ஆலோசனைப் படியே சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் அவரவர் கட்சிகளுக்கு நல்லது எது என்பதைக் காட்டிலும் நாட்டிற்கு நல்லது எது என்பதையே பிரதானமாகக் கொள்ள வேண்டுமென்றும் திரு. பி. டி. ராஜன் கூறினர்.

அரசாங்கம் பாட புத்தகம் வெளியிடுவது பற்றிய தனது திட்டத்தை தற்போதைக்கு ஒத்திப்போட்டு மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும் என்றும் திரு. பி. டி. ராஜன் யோசனை கூறினர்.

பள்ளியை மூடுவோம், புத்தகக் கடையைத் திறக்க மாட்டோம் என்பது போன்ற நடவடிக்கைகளில் இறங்காமலிருக்க வேண்டுமென்றும் அவர் பாட புத்தக ஆசிரியர்களையும், வெளியீட்டார்களையும் கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள் மயிலை சிவமுத்து, கொத்த மங்கலம் சுப்பு, த.சே. உமாபதி, க. அப்பாதுரை, அன்புகணபதி, பகீரதன், ந. சண்முகம், ரா. சங்கரன், ஆறுமுகம் செட்டியார் ஆகியவர்களும் பாட நூல் ஆசிரியர்களின் கோரிக்கையை ஆதரித்துப் பேசினர்கள்.

---

## பாட புத்தகங்களை சர்க்கார் பிரசுரித்தல்

---

### திருச்சி பெற்றோர்கள் கூட்டத்தில் கண்டனம்

---

### 5 வருடங்களுக்காவது முடிவை நிறுத்தி வைக்கவும்

பாடப் புத்தகங்களை சர்க்கார் பிரசுரிப்பதை ஆட்சேபிக்க திருச்சி பெற்றோர்களின் கூட்டமொன்று 14–12–57 அன்றுமாலை ராணி மங்கம்மாள் ஹாலில் நடைபெற்றது. ஸ்ரீ கே. ஏ. பி. விஸ்வநாதன் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், சர்க்கார் தாங்கள் மேற்கொண்ட தொழில்களில் வெற்றி காணவில்லை என்றும், மின்சார விநியோகத்தில் சர்க்காருக்கு நஷ்டமே ஏற்பட்டுள்ளதாகவும், பாடப் புத்தக பிரசுரம் சம்பந்தமாக பெற்றோர்கள் அபிப்பிராயம் தெரிவிக்க சந்தர்ப்பம்



அளிக்கப்படவில்லை என்றும் கூறினர். சர்க்கார் பாடப் புத்தக பிரசுரத்தை மேற்கொண்டால், அவற்றின் தரம் குறையுமென்றும் குறிப்பிட்டார். அநேக பிரசுரதார்கள் எவ்விதம் பாதிக்கப்படுவார்கள் என்பதை விளக்கி, ஏற்கெனவே சர்க்கார் அங்கீகரித்த புத்தகங்கள் என்னுவது என்று வினவினர்.

அட்வகேட் ஸ்ரீ கைலை ஆனந்தார் பேசுகையில், போட்டா போட்டியில் நல்ல பாடப் புத்தகங்கள் பிரசுரமாவது நின்றுவிடுமென்று எச்சரித்தார்.

டாக்டர் இ. பி. மதுரம் எம். எல். ஏ., அட்வகேட் ஸ்ரீ எம். ராமச்சந்திர அய்யர், முனிசிபல் கவுன்சிலர் திரு. ஆர். நாகசுந்தரம், திரு. கண்ணன் முதலியோர் சர்க்கார் முடிவைக் கண்டித்துப் பேசினர்.

பின்வருமாறு தெரிவித்து தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டது :—

பாடப் புத்தகங்களை தாங்கள் பிரசுரிப்பதை சர்க்கார் கைவிட வேண்டும். இது முடியாவிட்டால் ஐந்து வருஷங்களுக்காவது தங்கள் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும். இதுவும் சாத்யமில்லாவிட்டால் பிரசுரகர்த்தர்களிடமிருந்து அவர்கள் ஐந்து வருஷ உபயோகத்துக்காக வைத்திருக்கும் அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களை வாங்கிக்கொள்ள வேண்டும்.

---

## சர்க்கார் பாட புத்தக பிரசுரத்தைக் குறித்து திருவல்லிக்கேணி கூட்டத்தில் எதிர்ப்பு

பாட புத்தகங்களை சர்க்காரே பிரசுரிக்க உத்தேசிப்பதை எதிர்க்க திருவல்லிக்கேணி பொது மக்களின் கூட்டமொன்று ரிடயர்டு ஜில்லா நீதிபதி ஸ்ரீ பி. எம். ஸ்ரீனிவாசய்யங்கார் தலைமையில் நடைபெற்றது.

வித்வான் கே. ஒ. மணவாளன், சர்க்காரின் மேற்கூறிய முடிவை கண்டித்து பேசுகையில் எந்த ஜனநாயக நாட்டிலும் இம்மாதிரி கட்டுப்பாடும் ஏகபோகமும் கிடையாதென்றும் லாபம் அடிப்பதே இந்த அரசாங்கத்தின் இந்த எண்ணமென்றும், எவ்வளவோ பிரச்சனைகளிருக்கையில் புத்தக தொழிலில் தலையிடுவது அனாவசியமென்றும், பாட புத்தகங்கள் நிர்ணயம் விஷயத்தில் லஞ்சம் தாண்டவமாடுவதாகக் கூறுவது தெளிவற்ற புகார் என்றும், அப்படி ஊழலிருந்தால் அதை அகற்றட்டுமே என்றும் கூறினர்.

ஜனாப் எஸ். எம். பாஸில் பேசுகையில் சர்க்காரின் மேற்கண்ட முடிவு பைத்தியக்காரத்தனம் என்றும் இது யதேச்சாதிகார சர்க்கார் என்றும் சர்க்கார் பாட புத்தகங்களில் அரசியல் புகுந்துவிடும், சில அரசியல் வாதிகளின் தோத்திரம்தான் அப்புத்தகங்களிலிருக்கும் என்றும், பாட புத்தகப் பிரச்னைகளை வைத்து இம்மந்திரிகள் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வி நிச்சயமென்றும் கூறினார்.

லெப். கர்னல் ஸி. ஆர். கிருஷ்ணசாமி அனுப்பிய செய்தியை ஸ்ரீ கே. சீனிவாசாச்சாரி வாசித்தார். சர்க்கார் கல்வி பற்றி தெளிவான நோக்கு இல்லாதவர்கள் என்றும் பிரசுரகர்த்தர்கள் போராட வேண்டும் என்றும் கூறினார்.

---

## அறிவுக் கதிர்

கட்சிப் பணியும் களத்துப் பணிபோன்று வீரருக்கு ஏற்றதேயன்றி, விலாவிலே விரக்திப்புழு நடமாடுவோருக்கோ, மனதிலே சுயநலம் எனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று.

இலக்கிய ஏடுகள் மக்களின் மார்க்கெட்டிலே மலிந்து நடமாட வேண்டுமானால் இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பை மேட்டுக்கு வரத் தயாராக இருக்கவேண்டும்.

தலைகுனிந்து நிற்பது, பெருமூச்செறிவது, நம்மால் ஆகிற காரியமா என்று இழுத்துப் பேசுவது ஆகிய முறைகள் வாலிபர்களுக்குப் பிடிக்காதவை.. அவர்கள் செயலாற்றும் தீரர்கள்.

பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்குமட்டுமல்ல, ஏற்கனவே நமது மக்களுக்குத் தெரிந்திருக்கிற பல விஷயங்களை மறந்துபோகச் செய்வதற்கும் பல புத்தகங்கள் தேவை.

விதி நமது பரம்பரை நோய்—பூர்வீகச் சொத்து, ஆஸ்ரமத்திலே பிறந்து, அரண்மனையிலும், குடிசையிலும் சரிசமமாகப் படர்ந்த பழம் பெரும் நோய்.

அன்பெனும் நெய் பெய்து, ஆதரவெனும் திரியிட்டு, இன்மொழி எனும் தூண்டுகோலால் தூண்டிவிட்டு, ஒளியை இல்லத்தில் பெற உதவும் அகல், மனைவி.

மனிதநீதி அரச நீதியைவிடப் பெரியது. அதுதான் அரசநீதிகளை அவ்வப்போது மாற்றியும் திருத்தியும் வருவது.

# திருச்சிராப்பள்ளி மாவட்டப் பாடநூல் ஆசிரியர் கழகம்.

---

**மாண்புறு முதல் அமைச்சர் அவர்கள் திருமுன்னர்,**

**சென்னை அரசாங்கம், சென்னை.**

---

## அரசாங்கம் பாடநூல் வெளியிடும் கொள்கை தூதுக் குழு விண்ணப்பம்.

---

மதிப்பிற்குரிய ஐயா,

அடுத்துவரும் ஆண்டுகளிலிருந்து பள்ளிக்கூடப் பாடநூல்களைச் சென்னை அரசினரே வெளியிடுவதாகச் செய்துள்ள முடிவுபற்றி இக்கழகம் கீழ்க்காணும் தன் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.

1. **Dr. A.** இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நிறுவப்பெற்ற உயர்நிலைக் கல்விச் சீர்திருத்தக் குழுவினரின் அறிக்கையிலோ, அல்லது **Dr.** அழகப்ப செட்டியார் அவர்களின் தலைமையில் அமைக்கப்பெற்ற தொடக்கக் கல்விக் குழுவின் அறிக்கையிலோ, அன்றி இவ் வறிக்கைகளின் முடிவுகளுக்கிணங்க அரசாங்கத்தார் வெளியிட்ட வெள்ளையறிக்கையிலோ "பாடபுத்தக வெளியீடு தேசியமயமாக்கப்படும்" என்ற செய்தி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இங்கிலையில் அரசாங்கத்தார் யாதொரு முன்னறிவிப்புமின்றித் திடீரென "அடுத்துவரும் ஆண்டுகளிலிருந்து பாடபுத்தகங்களை அரசாங்கம் வெளியிடும்" என்று அறிவித்ததை கண்டு நாங்கள் பெரிதும் திகைப்படைகின்றோம்.

2. அரசினரின் மேற்கண்ட முடிவினால் பாடநூல் ஆசிரியர்கள் சுமார் 2000 பேர்கள் பாதிக்கப்படுவர் என உறுதியாக நம்புகின்றோம். மற்றும் பதிப்பகத்தார், புத்தக வியாபாரிகள், அச்சகத்தார், ஓவியர்கள், பிளாக் தயாரிப்பாளர்கள், டைப் தயாரிப்பாளர்கள் ஆகியோரும் சிறு சிறு வியாபாரிகளும் ஆயிரக்கணக்கான வேலையாட்

களும் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

3. அரசாங்கமே பாடநூல்களை வெளியிடும் பொறுப்பை மேற்கொள்ளுமேயானால் மிகக் குறைந்த அளவு ஆசிரியர்களுக்கே நூல் எழுதும் வாய்ப்புக் கிட்டும். பெரும்பான்மையான ஆசிரியர்கள் தாங்கள் பெறும் சிறி வருவாயையும் இழந்து பெரிதும் துன்புறவும் கூடும். ஆனால் இப்பொழுதுள்ள தனியார் வெளியிடும் முறையால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயன்பெற்று வருகின்றனர். எனவே இப்பொழுதுள்ள முறையினையே நீடித்து இருக்கச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

அரசினர் தற்பொழுது மேற்கொள்ளவிருக்கும் முறையினால், குறைந்த அளவினரும் குறிப்பிட்ட ஒரு சிலருமே நூல் எழுதும் வாய்ப்பைப் பெறும்போது சிறந்த கருத்துடைய நூல்களும் வெளிவர வாய்ப்பில்லாமற் போய் விடலாம். புதுப்புது கருத்துக்களும் முறைகளும் ஏற்படவும் வழியிராது.

4. இப்பொழுதுள்ள முறைப்படி தனிப்பட்ட பதிப்பகத்தார் பாடநூல்கள் வெளியிட்டு வரும் ஏற்பாட்டால், பாடநூல் எழுதும் ஆசிரியர்களேயன்றி, பொதுமக்களுக்கான பல்வேறு கருத்துக்களையுடைய நூல்களும், இலக்கியம், கலை சம்பந்தமான நூல்களும் எழுதும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும் நலம் பெற்று வருகின்றனர்.

ஆனால் அரசாங்கம் மேற்கொள்ள விருக்கும் முறையால் தனிப்பட்ட பதிப்பகத்தார் பெரிதும் வருவாய் குன்றி, அதனால் சிறந்த கருத்துடையனவும், நன்முறையில் அமைக்கப்பட்டனவுமாக வெளியிடப்பட்டுவரும் நூல்கள் இனி வெளியிடப்படாத நிலைமை ஏற்பட்டு விடுமோ என அஞ்சுகின்றோம். மிகவும் விலையுள்ள இலக்கியம், கலை ஆகிய நூல்கள் எல்லாம் மலிவுப் பதிப்புக்களாக ஏராளமாக வெளியிடப்பட்டு வருவதை அரசாங்கம் நன்கு உணரும். இவ்வாறு அவர்கள் மலிவுப் பதிப்புக்களை வெளியிட இயல்வது, பாடநூல்களை வெளியிடுவதன் மூலம் பெறும் வருவாயினாலன்றி வேறில்லை என்பதையும் அரசாங்கம் நன்கு அறியும்.

5. தனிப்பட்ட பதிப்பகத்தார் எவ்வளவுக்கெவ்வளவு நூல்கள் வெளியிட முன்வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மிக எண்ணிக்கையில் நூல் எழுதும் ஆசிரியர்களும் வருவாய் பெற வாய்ப்பு இருக்கின்றது என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம்.

6. அரசாங்கமே நூல்களை வெளியிடும்பொழுது அவ்வெளியீடுகளில் ஏதேனும் பிழைகளோ தவறுதல்களோ ஏற்படின் அவற்றை



உடனடியாகத் திருத்தி வெளியிடும் வாய்ப்பு மிகமிகக் குறைவு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் இவ்வாண்டு அரசினர் வெளியிட்ட சில பாடநூல்களில் பிழைபட்ட கருத்துக்களும் தவறான செய்திகளும் கொடுக்கப்பெற்று அவை இன்றளவும் திருத்தப்படாமல் இருக்கின்றன என்பதையும் எடுத்துக்கூற விரும்புகின்றோம்.

7. அரசினரின் திட்டப்படி பாடநூல்களை அரசாங்கம் வெளியிட நேரிடுமாயின் பாடநூல்கள் அனைத்தும் உரியகாலத்தில் கிடைக்காமல், அதனால் பாடம் நடத்துவதில் தொல்லை ஏற்படக்கூடும் எனப் பெரிதும் அஞ்சுகின்றோம்.

இவ்வமையத்தில் இப்போது அரசாங்க வெளியீடாக வந்து கொண்டிருக்கும் ஒரு சில பாடநூல்களும்கூட உரியகாலத்தில் கிடைப்பதில் சங்கடங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே, எங்களது இவ்வேண்டுகோளை ஏற்று அரசாங்கம் பாடநூல்களை வெளியிடும் முயற்சியைக் கைவிட்டு, இப்பொழுதுள்ளது போன்றே தனியார் வெளியிடும் முறையையே நீடிக்கச் செய்யுமாறு வேண்டுகின்றோம். இதனால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் வாழ்க்கைக்கு இடையூறு நிகழா வண்ணம் பாதுகாக்குமாறு வேண்டுகிறோம்.

இத்தூதுக் குழுவினை வரவேற்றுப் பொறுமையோடு எங்கள் கோரிக்கைகளுக்குச் செவிகொடுத்த தங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**ம. பெரியசாமி பிள்ளை,**
தலைவர்

**கே. நாகராஜராவ்,**
கூட்டு அமைச்சர்

**ப. அரங்கசாமி,**
**கோ. இரத்தினம் பிள்ளை,**
**A. S. குப்புசாமி அய்யங்கார்,**
தூதுக்குழுவினர்.

இவ்விண்ணப்பம்

மாண்புமிக்க கல்வியமைச்சர் அவர்கட்கும் பணிவுடன் அளிக்கப்பெற்றுளது.

இதன்படி கீழ்க்கண்டவர்கட்கு அனுப்பப்பெற்றுள்ளன.

1. பெருமதிப்பிற்குரிய மாநில கவர்னர் அவர்கள்.
2. மாநிலப் பொதுக்கல்வி இயக்குனர் அவர்கள், சென்னை.
3. செயலாளர் அவர்கள், சென்னை அரசினரின் கல்வித்துறை.

# திராவிடர்கள் எகிப்திலிருந்து வந்து குடியேறியவர்களே

## அகஸ்திய முனியும் எகிப்திய நாட்டவரே

### தொல் பொருள் ஆராய்ச்சி நிபுணர் கருத்து

திராவிடர் என்போர் தென்னிந்தியாவின் சுதேசிகள் அல்ல. மிகப் புராதன காலத்தில் எகிப்திலிருந்து தென்னிந்தியா வந்து குடியேறியவர்களே என்று நேற்று தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் பேசுகையில் டாக்டர் ஜே. டி. கார்னீலியஸ் கூறினார்.

அவர் மேலும் சொன்னார் : எகிப்திலிருந்து முதன் முதல் தென்னிந்தியா வந்த எகிப்தியர்கள் பொதியமலையைச் சுற்றி தமிழ் நாட்டில் குடியேறினர். அகஸ்திய முனியும், அவரது சகாக்களுமே அப்படிக் குடியேறியவர்கள். அகஸ்திய முனி என்ற பெயர் பழைய எகிப்திய மன்னர் ஒருவரது பெயரின் திரிபுதான். இரண்டாவதாக எகிப்திலிருந்து தென்னிந்தியா வந்தவர்கள் அகதிகள் கூட்டம். அவர்கள் 'ராவணு' இனத்தைச் சேர்ந்தவர்கள். 'அமான்ரா' இனத்தைச் சேர்ந்த மன்னர்களால் போரில் முறியடிக்கப்பட்டு ஓடினவர்கள். 'ராமா' என்ற பெயர் 'அமான்ரா' என்ற பெயரிலிருந்து வந்ததே. இந்த அகதிகள் படகுகளில் கடல் கடந்து தென்னிந்தியாவின் கீழ்க் கரையில் வந்து குடியேறினர். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக உள்நாட்டிலும் பரவினர். பின்னர் சோழ, பாண்டிய ராஜ்யங்கள் உருவாயின. மலையாளம் பேசிய சேரர்களும் எகிப்திலிருந்து வந்து தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் குடியேறியவர்களே. எகிப்தில் போரில் வெற்றி பெற்ற அமான்ரா கூட்டத்தாரும் பின்னர் வட இந்தியாவுக்கு வந்து குடியேறினர்.

இரு எகிப்திய மன்னர்களின் படங்களை டாக்டர் கார்னீலியஸ் காட்டினார். அந்த மன்னர்கள் நெற்றியிலும், மார்பிலும் கைகளிலும் அணிந்திருக்கும் சின்னங்கள் வைஷ்ணவர்களின் வடகலை நாமம்போல் உள்ளது.

— (சு. மி.)

# சர்க்காரும் பாடப் புத்தகங்களும்

வீட்டு வாசலில் பிச்சைக்காரன் வந்து நிற்பதைப் பார்த்த மருமகள் "பிச்சை இல்லை போ" என்று சொல்லி விட்டாள். இதைப் பார்த்த மாமியாருக்குக் கோபம் வந்தது. "வீட்டு யசமானி நானிருக்கும்போது நீ யார் சொல்வதற்கு?" என்று பிச்சைக்காரனைத் திருப்பிக் கூப்பிட்டு, "அவள் பேச்சைக் கேட்காதே; யசமானி நான் சொல்கிறேன், பிச்சை இல்லை போ" என்று கூறி, தன் அதிகாரத்தை நிலைநாட்டினாளாம்!

இதே போல்தான் நமது சர்க்கார்களிடையேயும் எந்தக் காரியத்தையும் தங்களுக்குத்தான் செய்ய உரிமையுண்டு என்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது. எந்தத் தொழிலையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்தினால், அதிலுள்ள குறைபாடுகள் யாவும் சரியாகிவிடும் என்று எண்ணுகிறார்கள்.

பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் சிலவற்றை அச்சடித்து விநியோகிக்கும் பொறுப்பை சமீபத்தில் சென்னை சர்க்கார் தாங்களே ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டிலிருந்து முதல் மூன்று வகுப்புகளுக்கான பாடப் புத்தகங்களை அச்சிட்டு விற்க ஏற்பாடு செய்து வருவதாகக் கல்வி மந்திரி சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டுவரும் இத்தொழிலை இப்போது சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டி வந்த காரணம் என்ன என்று கல்வி மந்திரி சட்ட சபையில் பேசியபோது தெளிவாக விளக்கவில்லை. தனிப்பட்டவர்கள் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதில் ஒழுங்கீனமும் குழப்பமும் இருப்பதாக மட்டுமே தெரிவித்திருக்கிறார்.

பாடப் புத்தகங்களைப் பள்ளிக்கூடங்களில் வைக்கும்படி சிபார்சு செய்வதில் ஓரளவு லஞ்சமும் ஊழலும் நிலவி வருகிறது என்பது தெரிந்த விஷயமே. இதைத்தான் குழப்பம் என்று கல்வி மந்திரி குறிப்பிட்டிருக்க வேண்டும். குளத்தில் பாசி இருந்தால் பாசியை எடுத்துச் சுத்தம் செய்வது தான் சரி. அதற்காகக் குளத்தையே தூர்த்து விடுவதா?

பாடப் புத்தகங்களை வெளியிடும் பொறுப்பைச் சர்க்கார் ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஊழல் குறைந்து விடுமென்று சொல்வதற்கில்லை. புத்தகங்களை வெளியிடும் தொழிலை சர்க்காரே நடத்திய போதிலும் பாடங்களையும், பாடப் புத்தகங்களையும் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு சிலர் கையில்தான் இருக்கப்போகிறது. அங்கும் இந்த லஞ்சப் புகார்கள் வராது என்பது என்ன நிச்சயம்?

அதோடு இப்போது தேவையான பிரதிகள் பாடப் புத்தகங்

களை அச்சிடக்கூடிய வசதிகள் சர்க்காரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தனிப்பட்ட அச்சகங்கள் மூலமாகவே சர்க்கார் இதைச் செய்ய வேண்டியிருக்கும். அப்போது இந்தக் 'கண்டிராக்டை'ப் பெறும் விஷயத்தில் போட்டியும் லஞ்சமும் கிளம்பாமல் இருக்காது.

அதுதான் போகட்டும். பொது மக்களுக்காவது இதனால் நன்மை உண்டா? பாடப் புத்தகங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று முன்பே விகடன் எழுதியிருந்தான். அதன்படி புத்தகங்கள் இனி மலிவாகக் கிடைக்குமா என்று பார்த்தால் கல்வி மந்திரி அந்த உறுதியும் அளிக்கவில்லை. புத்தகங்கள் விலை சற்றுக் கூடுதலானாலும் அதன் தரம் உயரும் என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார்; இதிலிருந்து புத்தகங்கள் விலை குறையும் என்ற நம்பிக்கையும் ஏற்படவில்லை.

மேலும் பாடப் புத்தகங்களை அச்சிடும் பொறுப்பை சர்க்கார் எடுத்துக் கொள்வது, புத்தகப் பிரசுரத் தொழிலையே நசுக்குவதில்தான் முடியும். ஏனெனில் பாடப் புத்தகங்கள் நிச்சயமாக விற்பனையாகிவிடும் என்ற நம்பிக்கையில்தான் பிரசுரத் தொழிலில் பலர் ஈடுபடுகிறார்கள். இதில் நல்ல லாபம் கிடைப்பதால்தான் அவர்கள் மலிவுப் பதிப்புக்கள், இலக்கிய நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலியவைகளைப் பிரசுரிக்க முடிகிறது. இதனால் தமிழில் ஏராளமான புத்தகங்கள் வெளிவரத் துவங்கியிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரமாக இருந்து வரும் பாடப் புத்தகங்களை சர்க்காரே வெளியிடத் தொடங்கி விட்டால், இனி இதர புத்தகங்களைப் பிரசுரிப்பதில் ஊக்கம் குன்றி விடும். ஆசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இதனால் வாய்ப்புக்கள் குறைந்து போகும். புத்தகப் பிரசுரம் சம்பந்தமான வேலையில் ஈடுபட்டுள்ள பலர் வேலையை இழப்பார்கள். பொதுவாக இலக்கிய வளர்ச்சியையே இது பெரிதும் பாதிக்கும்.

பாடப் புத்தகங்களை தேசியமயமாக்கும் கொள்கையினால் பொது மக்களுக்கு அனுகூலம் எதுவுமில்லை என்பது ஒரு புறமிருக்க, இது கல்வியின் தரத்தையே பாதிக்கும் என்று கல்வி நிபுணர்களும், அறிஞர்களும் கருதுகிறார்கள். இதில் உண்மை இருக்கிறது. பாடப் புத்தகங்களை நாடு முழுவதும் ஒரே மாதிரியாக்குவதால் பலவித நூதன ஆராய்ச்சிகளுக்கும் புதுமைக் கருத்துக்களுக்கும் இடமில்லாமல் போய்விடும்.

'அப்படி யொன்றுமிராது. அச்சிடும் வேலையைத்தான் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இனி சர்க்கார் அதிகாரிகளே புஸ்தகம் எழுதுவார்கள் என்று நினைக்க வேண்டாம். சிறந்த கல்வி நிபுணர்களையும்



அறிஞர்களையும் வைத்துக் கொண்டுதான் பாடங்கள் தயாரிக்கப்படும். கல்வித் துறையில் திறமை பெற்றவர்களுக்கு இதனால் அதிக வாய்ப்புக் கிடைக்கும். பிரசுர கர்த்தர்களைத் தேடிக் கொண்டு இனி அவர்கள் ஓட வேண்டியதில்லை' என்று கல்வி மந்திரி சமாதானம் கூறியுள்ளார்.

கல்வி மந்திரியின் உயர்ந்த லட்சியத்துக்கும் நல்ல எண்ணத்துக்கும் இது ஒரு சான்று. ஆனால், அனுபவத்தில் எப்படி நடக்கும்? புதுமைக் கருத்துக்களையோ அபிப்பிராயங்களையோ சர்க்கார் ஏற்றுக் கொள்ளும்படி செய்வது லேசில் முடிகிற காரியமா?

அதிலும் கட்சி அடிப்படையில் சர்க்கார் இயங்கி வரும்போது, இந்த ஆபத்து அதிகமாகிறது. 'அறிவை வளர்க்கும் கல்வித் துறையில் சர்க்கார் அதிகப்படியாகத் தலையிடுவது கம்யூனிஸ்டு நாடுகளைப்போல மக்கள் சிந்தனைகளையும் அபிப்பிராயங்களையும் கட்டுப்படுத்தி ஒரே மாதிரியாக உருவாக்கி விடும்' என்று டாக்டர் சி. பி.; ராஜாஜி போன்ற சிந்தனையாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இன்று நமது சர்க்கார் தன் கட்சிக் கொள்கைகளைப் பாடத்தில் புகுத்தா விட்டாலும், பிற்காலத்தில் வேறொரு கட்சி பதவிக்கு வந்தால் அவர்கள் பிள்ளைகளைப் பார்த்து, 'இதுதான் எங்கள் கொள்கை. இதைத்தான் நீங்கள் படித்தாக வேண்டும்' என்று சொல்லத் தயங்க மாட்டார்கள். தேசிய மயமாக்கும் கொள்கையை கல்வித் துறையிலும் புகுத்துவது சிந்தனைக்குச் சிறைத் தண்டனை அளிப்பது போலாகும்.

— **'ஆனந்த விகடன்'**
**(1-12-57)**

## பாடப் புத்தகங்கள்

சென்ற இதழில் பாட புத்தகங்களைப் பிரசுரம் செய்யும் பொறுப்பைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டால் ஊழல்கள்தான் விளையும் என்று எழுதினோம்.

'நாம் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்று சொல்வது போல் புது டில்லியிலுள்ள 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை நவம்பர் 22-ம் தேதி ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் இன்று பாரதநாட்டில் சில ராஜ்யங்களில் சர்க்காரே பாட புத்தகங்களைப் பிரசுரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது; அங்கெல்லாம் சர்க்கார் முயற்சிகள் தோல்வியே அடைந்துள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது.

பீகார் ராஜ்யத்தில் சர்க்கார் பாட புத்தகப் பிரசுரத் தொழிலை மேற்கொண்டது. அதன் விளைவாகச் சென்ற வருஷம் முழுதும் பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சரியாகப் புத்தகங்கள் கிடைக்க

வில்லை. இந்த வருஷம் நிலைமை அவ்வளவு மோசமாகவில்லை. சர்க்கார் போதிய புத்தகங்கள் பிரசுரித்துள்ளன. ஆனால் சில தனிப்பட்ட பிரசுரகர்த்தர்கள், சர்க்கார் புத்தகங்களைப் போல் அச்சிட்டுச் சர்க்கார் விற்ற விலைக்கும் குறைவான விலை வைத்து விற்றிருக்கிறார்கள். மாணவர்கள் குறைந்த விலைப் புத்தகத்தை வாங்கிச் சர்க்கார் புத்தகங்கள் அப்படியே தேங்கச் செய்துவிட்டனர்.

பீகார் சர்க்கார் இந்த நிலைமையைச் சமாளிக்க என்ன வழி என்று யோசித்தனர். பிறகு, 'இந்த யோசனை செய்யும் பொறுப்பு நாம் எடுத்துக் கொள்வானேன்?' என்று ஒரு கமிட்டியை நியமித்துவிட்டனர்! இது 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகைச் செய்தி.

ராஜஸ்தானிலும் சர்க்காரே பாட புத்தகங்களைப் பிரசுரிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளது. அங்கும் நிலைமை மேற்படி மேற்படியாகத்தான் இருக்கிறது.

படிக்கும் குழந்தைகளுக்குச் சர்க்காரினால் காலா காலத்தில் புத்தகங்களைத் தர முடியவில்லை. இதைப்பற்றி ராஜஸ்தான் சட்டசபையில் கேள்வி எழுந்தபோது, மத்திய சர்க்கார் வெளிநாட்டுக் காகிதத்தின் பேரில் விதித்திருந்த இறக்குமதித் தடையின் காரணமாகவும், நாட்டில் பரவியிருந்த 'புளு' ஜுரம் காரணமாகவும், குறித்த காலத்தில் புத்தகங்களை வெளியிட முடியவில்லை என்று சமாதானம் சொல்லியிருக்கிறார்களாம்.

இவையெல்லாம் சர்க்கார் கையில் ஒரு தொழில் போய்ச் சிக்கிக் கொண்டால் அது சரியாக நடைபெறுவதில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன!

'முன்னால் போனவன் இடறி விழுந்தால் பின்னால் வருகிறவனுக்கு விளக்குப் பிடித்தாற் போல்' என்று ஒரு பழமொழியுண்டு. முன்னால் சென்றுள்ள பீகாரும், ராஜஸ்தானும் இடறி விழுந்துள்ளன. சென்னை அரசாங்கமும் இந்த விளக்கு வெளிச்சத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சென்னை சர்க்கார் பல ஆண்டுகளாக எஸ். எஸ். எல். ஸி. மாணவர்களுக்குப் பாட புத்தகங்கள் வெளியிட்டு வருகிறார்கள். இந்த வருஷம் வெளியிட்டுள்ள புத்தகத்திலுள்ள ஒரு பாடத்தில், கண்ணன் பிருந்தாவனத்தில் குழல் எடுத்து ஊதுவதைப் பற்றி ஒரு பாடம் வருகிறது. அந்தப் பாடத்துக்குக் குறிப்புரை எழுதச் சர்க்கார் நியமித்த பிரகஸ்பதி 'பிருந்தாவனம் என்பது மைசூர் சமஸ்தானத்தில் உள்ள ஒரு பெரிய பூந்தோட்டம்' என்று எழுதி, அது பாட புத்தகத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. இதை ஒரு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் எடுத்துக் காட்டியிருந்ததை நமது வட்டமேஜைப் பகுதியில் நேயர்கள் பார்த்திருக்கலாம்!



பாடப் புத்தகங்களைப் பிரசுரிக்கும் தொழிலை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அது பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கும் அபாயம். பிரசுரத் தொழிலுக்கும் இடைஞ்சல். வேலையில்லாத மக்கள் தொகையை அதிகப்படுத்துவானேன்?

— "கல்கி" (1-11-57)

## யோசனையற்ற முடிவு

பாட புத்தகங்கள் பிரசுரிக்கும் தொழிலை தாங்களே மேற்கொள்வதென்ற முடிவை சர்க்கார் புனராலோசனை செய்ய வேண்டுகிறோம். இது சம்பந்தமாக பலதரப்புகளிலிருந்தும் வெளியாகியுள்ள முறையீடுகளை அவர்கள் கவனித்திருக்கவேண்டும். அவற்றில் வலியுறுத்தப்பட்டுள்ள உண்மைகள் பலவற்றையும் சர்க்கார் நினைவில் கொண்டுதான் மேற்கண்டவாறு முடிவு செய்தனரா என்று தெரியவில்லை. தற்போது பாட புத்தகங்கள் பொறுக்கியெடுக்கப்படும் முறை ஊழல்கள் நிறைந்ததென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இவைகளுக்கு இடமில்லாதபடி அம்முறையைத் திருத்துவது அல்லது இதுபற்றிய விதிகளை கண்டிப்பாக அமுல் நடத்துவது சாத்தியமில்லையா? தற்போதைய முறையின் கீழ் பாட புத்தகங்களில் போதிய அளவு தரம் காணவில்லையென சர்க்கார் நினைத்தால் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கான கட்டு திட்டங்களை அவர்கள் ஏன் உறுதியுடன் அமுல் நடத்தி வைக்கக்கூடாது? இவ் வழியை விட்டுப் பாட புத்தகப் பிரசுரத் தொழிலை சர்க்காரே மேற்கொள்வதால் என்ன அனுகூலம் ஏற்படக்கூடும்? அதற்கு மாறாக பல விதங்களிலும் தீங்கே விளையும் என எதிர்பார்க்கத் திட்டமான காரணங்களுண்டு.

சாதாரணமாக போட்டி உள்ள நிலைமையில்தான் மனிதனின் முழுத் திறமையும் வெளிப்படுவது இயல்பு. பல பிரசுரகம்பெனிகள் உள்ள நிலைமையில், சிறந்த ஆசிரியர்களைத் தேடிப் பிடித்து கூடிய வரை தரமான புத்தகங்களைத் தயார் செய்ய அவை முயற்சி எடுத்துக்கொள்ளுகின்றன. விதவிதமான புத்தகங்கள் உள்ள நிலையில், வெவ்வேறு போதனா முறைகள் கையாளப்படுவதும், அதன் மூலம் அவற்றின் தரம் உயர்வதும் சாத்தியமாகிறது. ஆனால் சர்க்கார் பாட புத்தகங்கள் பிரசுரிக்கையில் அதற்கெல்லாம் வாய்ப்பு இராது. ஒரே வகையான புத்தகங்களை ஒரே விதமாகப் போதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்தப் புத்தகங்களின் தரம் எவ்வாறிருக்கும் என்று தற்போது நாம் விவாதிக்கத் தேவையில்லை.

எப்படியும் சர்க்கார் இந்தப் பிரசுரத் தொழிலை மேற்கொள்ளும் நிலையில், தற்போது போல் இவ்வளவு பெருவாரியான ஆசிரி

யர்கள் மேற்கொண்டு புத்தகம் எழுதும் தொழிலில் ஈடுபட முடியாது என்பது தெளிவு. மேலும் தற்போதுள்ள நூற்றுக்கணக்கான பிரசுரக் கம்பெனிகளின் நிலை என்னாகும் என்பதையும் சர்க்கார் யோசிக்க வேண்டும். அவை பாட புத்தகங்கள் மூலம் கிடைக்கும் நிலையான வருமானத்தை நம்பி, நாளடைவில் மெதுவாக விற்கக்கூடிய வேறு பல முக்கியமான புத்தகங்களையும் பிரசுரிக்கின்றன. இனி இத்தகைய பிரசுரங்களைக் காண்பது அரிதாகிவிடும். சர்க்கார் முடிவால் பிரசுரக் கம்பெனிகளில் உள்ளவர்கள் வேலை இழப்பதுடன், பொதுவாக அச்சுத் தொழிலும், காகித வர்த்தகமும் விசேஷமாகப் பாதிக்கப்படும்.

சர்க்கார் தங்கள் முடிவை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவதில் இன்னொரு அநீதி இருக்கிறது. பாடபுத்தகக் கமிட்டி இவ்வாண்டில் நூற்றுக் கணக்கான புத்தகங்களுக்கு ஏற்கெனவே அங்கீகாரம் அளித்திருக்கிறது. அவை இன்னும் ஐந்து வருஷ காலம் பள்ளிக்கூடங்களில் பாட புத்தகங்களாக உபயோகிக்கப்படலாம் என்பதே அந்த அங்கீகாரத்தின் பொருள். எனினும் அடுத்த வருஷத்திலிருந்தே ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், ஸெகெண்டரிப் பள்ளிக்கூடங்கள் இவற்றில் முதல் மூன்று வகுப்புகளுக்கான பாடபுத்தகங்களை தாங்கள் பிரசுரிக்கப் போவதாக சர்க்கார் தனிப்பட்ட பிரசுரகர்த்தர்களுக்கு அறிவித்திருப்பது என்ன நியாயம்?

(சு. மி. 29-11-57)

---

## கொய்த மலர்கள்

அழகு ஓர் ஆபத்தான ஆயுதம். ஆனால் பெண்களுக்குச் சமத்துவமும் சுதந்திரமும் கிடைக்கும் வரை இந்த ஆயுதத்தையே பயன்படுத்தித் தீரவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். அந்த நிர்ப்பந்தம் நீங்கியபின், அழகு இன்பக் காட்சியாக இருக்க முடியும்.

— அண்ணா.

விதவையின் கணவன் இறந்துவிட்டால், அவள் உள்ளமும் உணர்ச்சியும் இறந்தாவிடும்? இதை ஏன் இந்த சமூகம் தெரிந்து கொள்வதில்லை?

—காண்டேகர்.

தம்முடன் பிறந்து வாழும் ஆதித்திராவிடர்களை வண்டிகளில் ஏறமுடியாதவாறு தடுக்கிறோம். குளங்களில் நீர் மொள்ளாதவாறு வெறுக்கிறோம். தீண்டாத மக்களென ஒதுக்கித் தள்ளுகிறோம். இதைவிடப் பிரிட்டிஷ் ஆட்சி என்ன கொடுமை செய்துவிட்டது?

—காந்தியடிகள்.

# திரு. வல்லை-பாலசுப்ரமணியம், B. A.

### அவர்கள்

## வாழ்க்கைச் சுருக்கம்

இவர்தம் தந்தையார் செந்தமிழ் இரத்தினாகரம்–மருத்துவ மணி-வல்லை-சண்முக சுந்தர முதலியார் ஆவார். இஞ்ஞான்று கீழ்ப் பாக்கத்திலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரிக்கு அக்காலத்தில் அடிகோலியவர்களில் இவர் ஒருவராவர். பெண் கல்வி பெரிதும் பரவாத–அதற்கு மாறாக ஏசப்



பட்ட—அக்காலத்தில் மிகத் துணிச்சலுடன் பெண்மணிகளுக்குத் தமிழ்க் கல்வி போதித்தார். இப் பெண்மணிகளுள் இப்போது முதன்மையாக இருப்பவர்கள் பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மையாரும், பண்டிதை T. பத்மாவதி அம்மையாரும் ஆவார்கள்.

வல்லை – பாலசுப்பிரமணியம் அவர்கள் இளமைப் பருவத்திலேயே தமிழின்பால் ஆர்வங் கொண்டவராகி, அதில் பெரிதும் திறமை பெற்றிருந்தார். அஞ்ஞான்று பெரும் புலவராக விளங்கிய பூவை-கிருஷ்ணசாமி முதலியாரால் பெரிதும் பாராட்டப் பெற்றார். பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி வகுப்புகள் ஒவ்வொன்றிலும் தமிழில் முதன்மையாக நின்று, பல பரிசுகள் பெற்றார்.

"வேளாளர் தோற்றமும் அவர்தம் வரலாறும்" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியதற்காக, வேளாளர் சங்கத்தாரிடமிருந்து தங்கப் பதக்கம் பரிசு பெற்றார்.

இவர் இரண்டாண்டுகள் சென்னை நகராண்மைக் கழக அலுவலகத்திலும் (Madras Corporation), ஓராண்டு பஞ்சாயத்துக்களை நெறிப்படுத்தும் சென்னைத் தலைமை அலுவலகத்திலும் (Office of the Registrar–General of Panchayats) பணிசெய்து, பின்னர் சென்னை அரசினர் மொழிபெயர்ப்பு அலுவலகத்தில் சேர்ந்து, அங்கேயே படிப்படியாக உயர்ந்து, இப்போது அந்த அலுவலகத்தின் தலைவராக விளங்குகிறார்.

இவர் திரு. வி. க. அவர்களால் தமது வாழ்க்கைக் குறிப்பில் மிகச் சிறந்த முறையில் பாராட்டப் பெற்றிருக்கிறார். சில ஆண்டு

கள் "சித்தாந்தம்" மாத இதழுக்குத் துணை ஆசிரியராக இருந்திருக்கிறார். "சித்தாந்தம்," "குமரன்," "நவசக்தி," "மணிவாசகம்," "பச்சையப்பன் கல்லூரிச் சஞ்சிகை" ஆகியவற்றில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். சில விசேஷ மலர்களிலும் இவர் கட்டுரைகள் வெளி வந்ததுண்டு.

சென்னை அரசினர் சார்பாக "இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை (Constitution of India") தமிழில் மொழி பெயர்த்தவர் இவரே. சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, பே. நா. அப்புசாமி, L. கிருஷ்ணசாமி பாரதி, M.P., சென்னை அரசினர் சட்ட இலாகாக் காரியதரிசி K. V. இராஜகோபாலன் ஆகியோர் இவர் தம் மொழி பெயர்ப்புத் திறமையை மெச்சிப் பாராட்டுரை வழங்கியுள்ளார்கள். இவர் சில காலம் சென்னைத் தமிழ் ஆட்சி மொழிச் சட்ட செயலாற்றுக் குழுவினருக்குக் காரியதரிசியாக இருந்தார். சட்டத் துறைக் கல்வித் தமிழ்ச் சொல்லாக்கக் குழுவில் இவர் உறுப்பினராயிருக்கிறார். இவர் இப்போது வகிக்கும் பதவி **சென்னை அரசினர் தலைமை மொழி பெயர்ப்பாளர் —புத்தகப் பதிவு அதிகாரி (Senior Translator to Government and Registrar of Books.)** என்பதாகும்.


"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 3

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2

Form of Certificate of Income வருமான நற் சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2


தபால் செலவு உட்பட

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.


## தென்னார்க்காடு மாவட்ட உதவிபெறும் துவக்கப் பள்ளிகளின் ஆசிரியப் பொறுப்பாளர்கள், பொறுப்பாளர்கள் கழகம்

சென்னை மாநில முதலமைச்சர் கனம் கே. காமராஜ், எம்.எல்.ஏ. அவர்கள், 1957 ஆண்டு, டிசம்பர் மாதம் 3-ந் தேதி விழுப்புரம் வந்திருந்தபோது ஷை கழகத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர்:


1. சமீபத்தில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 1-11-'56 முதல் சம்பள விகிதாசாரம் (ரூ. 45 முதல் 85) நிர்ணயித்தது போல், ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தை நிர்ணயிக்க வேண்டுமாகக் கேட்டுக் கொள்ளுகிறது.



(3-12-57-ல் விழுப்புரம் மகாத்மாகாந்தி பாடசாலைக் கட்டடத்தை கனம் முதலமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்கள் திறந்து வைத்தபோது ஜில்லா ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்க சார்பில் வரவேற்பு பத்திரத்தை வாசித்தளித்து மகஜர் சமர்பித்தபோது எடுத்த புகைப்படம்.)

2. ஆதாரக் கல்வி மறு பயிற்சிக்கு அனுப்பப்படும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் ஸ்தானங்களில் வேறு ஆசிரியர்களை நியமிக்கவும்

அவர்களுக்கான கிரான்ட்டையும் சாங்ஷன் செய்யும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது.



(3-12-57-ல் விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலைக் கட்டடத்தை கனம் முதலமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்கள் திறந்து வைத்தபோது எடுத்த புகைப்படம்.)

3. சமீபத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள (Over all average attendance Ratio) ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள், அதுவும் பள்ளி பூராவுக்குமுள்ள மொத்த ஆசிரியர்களின் விகித சராசரி ஆஜர் 35 ஆக இருக்க வேண்டும் என்பதை ரத்து செய்யும்படியாக கேட்டுக்கொள்ளுகிறது. முதல் வகுப்பில் 36 மாணவர்கள் சராசரி ஆஜர் இருந்தால் இரு ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம் என்று இருந்து வந்தது. ஒரு ஆசிரியருக்கு 35 சராசரி ஆஜர் வீதம் கணக்கிடப்படுவதால் 65 மாணவர்கள் முதல் வகுப்பில் சராசரி ஆஜர் இருந்தாலும் அதற்கு மற்றொரு ஆசிரியர் நியமிக்க முடியாத நிலையில் உத்தரவு ஏற்பட்டுள்ளது. ஒரு ஆசிரியர் 65 மாணவர்களை அதிலும் முதல் இரண்டு வகுப்புக்களில் கண்காணித்துப் பாடங்களை போதிப்பது மிகுந்த சிரமத்தைத் தருகின்றது. இம்மாதிரி ஒவ்வொரு வகுப்பிலும் கஷ்டங்கள் உள்ளது.

4. நிற்க, மொத்த ஆசிரியர்களின் விகித சராசரி (Over all average attendance Ratio) 35 என்றிருப்பது இன்னும் பாதிக்



கின்றது. உதாரணமாக, 5 வகுப்புக்கள் உள்ள ஒரு பாடசாலைக்கு இதுவரை 91 மாணவர்கள் சராசரி ஆஜர் இருந்தால் 5 ஆசிரியர்களுக்குக் கிரான்ட் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. மேற்கொண்டு 6-வது ஆசிரியரை நியமிப்பதானால் மொத்தத்தில் சராசரி ஆஜர் 120 இருந்தால் போதும். ஆனால் தற்போது வந்துள்ள சட்டப்படி 210 மாணவர் ஆஜர் இருந்தால்தான் 6-வது ஆசிரியரை நியமிக்க முடியும். ஆகவே அதிகப்படியாக 90-க்கு அதிகமாக மாணவர்களை சேர்த்தால்தான் 6-வது ஆசிரியர் நியமனம் செய்யலாம். புதியதாக சேரும் மாணவர்கள் முதல் வகுப்பில்தான் சேருவார்களேயொழிய மேல் வகுப்புக்களில் சேர்வதென்பது கிடையாது. ஆகவே முதல் வகுப்பிலிருக்கும் சுமார் 25 மாணவர்களுடன் மேலும் 90 மாணவர்களைச் சேர்த்தால்தான் அதிகப்படியாக ஓர் ஆசிரியரை நியமிக்க முடியும். இவ்விதம் முதல் வகுப்பில் மாணவரின் ஆஜர் 115 ஆகும் வரை 6-வது ஆசிரியரை நியமிக்க முடியாது. நடைமுறையில் சாத்தியமாகக் கூடிய காரியமில்லை. ஆகவே முதல் வகுப்பில் பிள்ளைகள் 40 அல்லது 50 க்கு மேல் வந்தால் சேர்த்துக் கொள்ள முடியாத நிலைமைதான் ஏற்படும். இது பள்ளிகளில் அதிகம் பிள்ளைகளை சேர்க்க வேண்டுமென்னும் கொள்கைக்கு மிகவும் முரண்பட்டதாகிறது. ஆகவே உடனடியாக மேற்படி சட்டத்தை ரத்து செய்ய உத்தரவிட வேண்டுமாயும் குறைந்த பட்சம் வகுப்பை அடிப்படையாகக் கொண்டு தற்காலிகமாக உத்திரவிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறது.

5. தற்போது என். ஜி. ஓ. க்களுக்கு சலுகைகள் கொடுக்கப்பட்டு வருவதுபோல் எய்டட் பள்ளி ஆசிரியர்களுக்கும் லீவு வசதி, இலவச வைத்திய வசதி, வீட்டு வாடகை அலவன்ஸ் வசதி முதலியன அளிக்கும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது.

6. தற்போது நவம்பர் மாத கிரான்டில் 75 சதவிகிதம் டிசம்பரிலும், டிசம்பர் மாத கிரான்ட்டை பிப்ரவரி அல்லது மார்ச்சு மாதத்தில் கணக்கு பார்த்து பூரா கிரான்ட்டையும் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படிச் செய்வதால் ஜனவரி மாதத்தில் கிரான்ட்டே இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே நவம்பர் மாத கிரான்ட்டை பூராவும் டிசம்பரிலும், டிசம்பர் மாத கிரான்டில் 75 சதவிகிதம் ஜனவரியிலும் கொடுத்து, மீதித் தொகையை வேண்டுமானால் பிப்ரவரி, மார்ச்சு மாதத்தில் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

| | |
|---|---|
| காரியதரிசி, | தலைவர், |
| **தேசிய உயர் துவக்கப்பள்ளி,** | **மகாத்மா காந்தி பாடசாலை,** |
| **நெல்லிக்குப்பம்** | **விழுப்புரம்** |

***3-12-'57***

# 1965-66-க்குள் கட்டாய ஆரம்பக் கல்வி திட்டம் நிறைவேறும்

## பதினொரு ஆண்டு பள்ளிப்படிப்பு அடுத்த வருடம் அமுல்

### சட்ட சபை கமிட்டி சிபார்சுகளின் பேரில் சர்க்கார் முடிவுகள்.

கல்வி பற்றிய அரசாங்க வெள்ளை அறிக்கையை பரிசீலனை செய்த மாநில சட்ட சபைக் கமிட்டியின் சிபார்சுகள்மீது அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

1965–66–க்குள் மாநிலத்தின் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் 5–வது வரை கட்டாய ஆரம்பக் கல்வி அமுலுக்குக் கொண்டுவரப்படும். தனிப்பட்ட பள்ளி மானேஜ்மெண்டுகள் சரியான முறையில் அமையுமாறு பார்த்துக்கொள்ள அரசாங்கத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்னும் சிபார்சும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கப்பட்டுள்ள சிபார்சுகள் வருமாறு :—

பள்ளிக் கல்விக் காலம் மொத்தம் 11 ஆண்டுகளாக இருக்க வேண்டும் நிரந்தர அடிப்படையில் அதை 12 வருஷமாக உயர்த்தக் கூடாது. ஆனால், இடைக் காலத்தில் வரையறைக்கு உட்பட்ட இடைக்கால மாணவர் குழாம்களுக்கு 12 ஆண்டு படிப்பு இருக்கவேண்டும்.

தற்போதைய 3 ஆண்டு எஸ். எஸ். எல். சி. வகுப்புகள், செகண்டரி கல்விக் கமிஷன் சிபார்சுப்படி, 4 ஆண்டு செகண்டரி படிப்பாக மாறவேண்டும். அதாவது பள்ளி நேரம் 4,000 மணியாக இருக்கவேண்டும்.

பள்ளி நேரம் 2,700 மணி உள்ள தற்போதைய எஸ். எஸ். எல். ஸி. படிப்பு முறையே, திருத்தப்படும் 4,000 மணி படிப்புக்கு அடிப்படையாக இருக்க வேண்டும். அளிக்கப்படும் கல்வியானது, சர்வகலாசாலைக்கு முற்பட்ட வகுப்பை முடித்தவர்களுக்கு சமமானது என்று சென்னை சர்வகலாசாலையால் அங்கீகரிக்கப்படும் படியாகவும், நடை முதல் ஆண்டில் கல்லூரிகளில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள புதிய மூன்று ஆண்டு பட்டப்படிப்பில் முதல் ஆண்டு வகுப்பில் சேர்த்துக்கொள்வதற்கு தகுதி அளிப்பதாகவும் இருக்க வேண்டும்.



2,700 மணி நேரமுள்ள தற்போதைய எஸ். எஸ். எல். சி. பல காரிய படிப்பே, திருத்தப்பட்ட 4 ஆண்டு 4,000 மணி நேரப் படிப்புக்கு அடிப்படையாக இருக்க வேண்டும். திருத்தப்பட்ட கல்வியின் நோக்கமும் முந்திய இரு அம்சங்களாகவே இருக்க வேண்டும். அதாவது தற்போது எஸ். எஸ். எல். சி. முடிவில் உள்ள கல்வி தரத்துக்கு குறையலாகாது. குறிப்பாக திருத்தப்பட்ட முறை தொழில் படிப்பில் புகட்டப்பட்ட விஞ்ஞான அறிவு, நடை முதல் ஆண்டில் அமுலாக்கப்பட்ட தொழிற் கல்விக்கு முற்பட்ட வகுப்பில் சேர்க்க தகுதி அளிப்பது என்று சென்னை சர்வகலாசாலையால் அங்கீகரிக்கத் தக்கதாக இருக்கவேண்டும். மற்றொரு நோக்கம் மாணவர்களை தொழில் கல்விக்கு ஆயத்தம் செய்வது. ஒரு ஆண்டு கால தொழில் நுட்ப பயிற்சி பெற்றதற்கு சமமானதாக அல்லது தற்போதைய மூன்று ஆண்டு பாலிடெக்னிக் படிப்பில் முதல் ஆண்டு முடிவுக் காலத்தில் இருக்கக் கூடிய அறிவு நிலைக்கு சமமானதாக அது இருக்கவேண்டும்.

புதிய பாடத் திட்டத்தை வகுப்பதற்காக நியமிக்கப்படும் நிபுணர் கமிட்டிக்கு மேற்கண்ட நோக்கங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

### 7 ஆண்டு ஆரம்பக் கல்வி

ஜுனியர் செகண்டரி படிப்புக்கும், உயர்தர ஆரம்பப் படிப்புக்கும் இடையே பாகுபாடுகள் நீக்கப்படவேண்டும். ஒரே படிப்பு முறை மட்டுமே இருக்க வேண்டும். சாரம் குறைவு படாமல் 8 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகளாக அதைச் சுருக்க வேண்டும். 11 ஆண்டு பள்ளிப் படிப்பு முறையில் முதல் 7 ஆண்டுகளில் எல்லாப் பள்ளிகளிலும் இது ஒன்றே பொது முறையாக இருக்கவேண்டும். (புதிய 1–லிருந்து ஏழாவது வகுப்பு வரை என்று அதைச் சொல்லலாம்.)

அடிப்படை கல்விக்கும், அடிப்படை முறை அல்லாத கல்விக்கும் இடையேதற்போதைய பாகுபாடுகள் நீக்கப்பட்டு, அடுத்த 10 ஆண்டுகளில் இணைப்பு முறை பூர்த்தியாகவேண்டும். கற்கும் மொழிகள் எல்லாவற்றையும் ஒரே பாடப் பிரிவாகக் கொள்ள வேண்டும். அதை மூன்று பிரிவாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

மொழிகள் :—

பிரிவு 1 – பிராந்திய மொழி.

பிரிவு 2 – ஹிந்தி அல்லது - 1–வது பிரிவில் சேராத வேறு ஒரு இந்திய மொழி.

பிரிவு 3 - ஆங்கிலம் அல்லது வேறு இந்திய மொழி அல்லாத மொழி.

புதிய 4 ஆண்டு உயர்நிலைப் படிப்பு (செகண்டரி) படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் 3 மொழிகள் கட்டாய பாடமாகும்.

அவற்றில் அரசாங்க பரீட்சை உண்டு. புதிய 8-வது வகுப்பிலிருந்து 11-வது வரை புதிய பாடத்தின் அம்சமாக 4 ஆண்டுகளுக்கு ஹிந்தி சொல்லிக் கொடுப்பது போதுமானது. புதிய வகுப்புகள் 6-வது 7-வது ஆகியவைகளில் ஹிந்தியை நீக்கிவிடலாம். புதிய பாட திட்டம் 1957–58 ஆண்டு முடிவுக்கு உள்ளாக தயாராகிவிட வேண்டும். ஆரம்பக் கல்வியில் தற்போதைய கல்வி முறையிலிருந்து புது கல்வி முறைக்கு மாறுவது 1958–59-ல் தொடங்கி, 1962-63-ல் பூர்த்தியடையவேண்டும். எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் ஏககாலத்தில் 2 கட்டங்களில் இந்த மாற்றம் ஏற்படவேண்டும். அதன்பின் அடுத்த ஒவ்வொரு வருஷத்துக்கும் ஒரு வகுப்பு வீதம் அதை விஸ்தரித்துக் கொண்டு போகவேண்டும். ஆரம்பப் பள்ளிகளில் மட்டுமின்றி செகண்டரி பள்ளிகளிலும் இந்த மாற்றம் ஏற்படவேண்டும். செகண்டரி பள்ளிகளைப் பொறுத்தவரை, புதிய பாடத் திட்டமானது மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் 25 சதவிகிதத்தில் 1959—60-லிருந்து அமுலாக்கப்பட வேண்டும். அந்த ஆண்டில் 4-வது படிவம் ஒழிக்கப்பட்டு, இந்த பள்ளிகளில் அதற்குப் பதிலாக புதிய 8-வது ஏற்படவேண்டும். 1962–63-ல் புதிய 11-ம் வகுப்பு ஏற்பட வேண்டும்.

1960–61-ல் மற்றொரு கோஷ்டி உயர்நிலைப் பள்ளிகள் (மொத்த பள்ளிகளில் சுமார் 10 சதவிகிதம்) இதே போல் உயர்த்தப்பட வேண்டும். சர்வ கலா சாலைக்கு முற்பட்ட வகுப்பு, கல்லூரிகளில் 1966–67 வரை இருக்க வேண்டும். அதற்குப் பிறகு அதை ஒழித்துவிட வேண்டும்.

## பள்ளி வயது

பள்ளிகளில் முதல் வகுப்பில் சேர்ப்பதற்கு குறைந்தபட்ச வயது தற்போது உள்ளபடி 5-க்கு மேல் இருக்க வேண்டும், கட்டாயக் கல்வி அளிப்பது சம்பந்தமாக குறைந்த பட்ச வயது 6-க்கு மேல் இருக்கலாம். குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதிலும், வயது வரம்பை அமுலாக்குவதிலும் குறைபாடுகளை நிவர்த்திக்க அனுபவசாத்தியமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

## 10 ஆண்டு வேலைத் திட்டம்

கட்டாயக் கல்வி லட்சியம் பள்ளியின் முதல் 5 ஆண்டுப் படிப்புவரை என்று வரம்பு கட்டப்பட வேண்டும். இதை அமுலாக்குவதற்கான காலம் 10 ஆண்டுகளாக விஸ்தரிக்கப்பட வேண்டும். 1965–66 – க்குள் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் 5-வது வரை கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும். கட்டாயக் கல்வி மூலம், சேதாரங்களை 10 சதவிகிதத்துக்கு குறைப்பது சாத்தியமாகும்.



மாணவர்களைச் சேர்ப்பதில் மாவட்டங்களுக்கிடையே வேறுபாடுகளும், மாணவர்-மாணவிகள் இடையே வேறுபாடுகளும் விரைவில் நீக்கப்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும் சிறுவருக்கும் சிறுமியருக்கும், செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் பள்ளிக்குச் செல்வதில் ஒரே மாதிரி வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். கட்டாயக் கல்வி உள்ள இடங்களில் குழந்தைகளின் வீட்டிலிருந்து ஒரு மைலுக்கு மேற்படாத தூரத்தில் பள்ளிகள் இருக்கச் செய்யவேண்டும்.

1–லிருந்து 5-வது வகுப்பு வரை செலவு வரம்பு ஜனத்தொகை அடிப்படையில் நபர் ஒன்றுக்கு 3 ரூபாய் என்று கொள்ளலாம். 6-வது வகுப்பிலிருந்து 11–ம் வகுப்பு வரை, ஜனத்தொகை அடிப்படையில் ஆண்டுக்கு நபர் 1–க்கு 2 ரூபாய் என வைத்துக் கொள்ளலாம்.

## கட்டாயக் கல்வி முறை

ஒரு பகுதியில் கட்டாய ஆரம்பக் கல்வி அமுலுக்கு வந்ததும் பள்ளியில் அது அமுல் நடத்தப்படும் முறை பின்வருமாறு :—

முதல் ஆண்டு :—அத்தகைய பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு வரை சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகள், கட்டாயப்படிப்புக்கு பேர் எழுதப்படுவர். ஆரம்பக் கல்விப் பருவம் முடியும்வரை, அந்தக் குழந்தைகளைப் பள்ளியிலிருந்து நிறுத்தலாகாது.

பள்ளியிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள், 6 வயது முடிந்து 7 வயது பூர்த்தியாகாமல் இருக்கும் குழந்தைகள் ஒவ்வொன்றும் இதற்கு முந்தின ஆண்டில் தாங்களாகச் சேர்க்கப்படாமல் இருந்தால் கட்டாயப் படிப்புக்கு சேர்க்கப்படவேண்டும். இப்படி முதல் வகுப்பில் சேர்க்கப்படும் குழந்தைகள், ஆரம்பக் கல்விப் பருவம் முடியும் வரை பள்ளியில் படித்தாக வேண்டும்.

ஒரு பகுதியில் இந்தத் திட்டத்தைப் புகுத்திய 5 ஆண்டுகளுக்குள் மாணவர்கள் சேர்ப்பு விகிதம் 1,000 மக்களுக்கு 110 மாணவராக அதிகரிக்கலாம்.

தகுந்த அதிகாரிகள் மூலமாக ஏழைகள் என நிச்சயிக்கப்பட்ட மாணவர்களுக்கு பள்ளியில் இலவச உணவு அளிப்பதென்பது, ஆரம்பக் கல்வி கட்டத்தில் ஒரு நிரந்தர ஏற்பாடு ஆகவேண்டும். பள்ளிகளில் இலவச உணவு அளிப்பது சம்பந்தமாக, ஜனத்தொகை அடிப்படையில் ஆண்டுக்கு நபர் ஒன்றுக்கு 11 அணா வீதமாக ஒதுக்கி வைப்பது அவசியமாக இருக்கும்.

## மாணவர், ஆசிரியர் விகிதம்

சேர்க்கப்படும் மாணவர்கள், ஒரு ஆசிரியருக்கு 40 பேருக்கு மேல் உயர்ந்தாலொழிய புதிய ஆசிரியர்கள் நியமனத்துக்கு அனுமதிக்கக் கூடாது. கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் என்பதில் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரி

யர் என்ற முறை இருத்தல் வேண்டும்.

### ஆசிரியர் ஊதியம்

ஆசிரியர்களுக்குத் தற்போது பலவிதமான சம்பள முறைகள் இருப்பதைக் கவனித்து, கூடுமானவரை ஒரே சீரான நிலைமை இருக்கும்படியாகத் திருத்த வேண்டும். ஒரே விதமான தகுதி யோக்யதாம்சம் படைத்து, ஒரே விதமான வேலை செய்கிறவர்களுக்கு, அவர்கள் பல்வேறு நிர்வாகத்தின்கீழ் வேலை செய்கிறார்கள் என்பதற்காக சம்பள விகிதத்தில் வித்தியாசம் காட்டக் கூடாது. தூர இடங்களுக்கு மாற்றப்படக்கூடிய நிலைமை இருந்தால் மட்டுமே இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

தேசீய நலப் பரப்பு சேவை, ஒரு ஆண்டுக்கு குறைவில்லாமல் அமுலில் இருந்த வட்டாரங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் போதுமான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு, ஆரம்பக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். 3-வது ஐந்தாண்டு திட்ட, கால முடிவுக்குள் அமுல் பூர்த்தி அடையவேண்டும். ஏற்கெனவே கட்டாயக் கல்வி இல்லாத நகரங்களும் கவனிக்கப்பட்டு அவற்றிலும் கட்டாயக் கல்வி அமுலாக்கப்பட வேண்டும். இதற்குப் புதிய வட்டாரங்களைத் தேர்ந்தெடுக்கும் போது, கல்வியில் அந்தப் பகுதியின் பின்னடைந்த நிலை கவனிக்கப்பட வேண்டும். எங்கெங்கு மாணவர்கள் பள்ளியில் சேரும் விகிதம் மிகக் குறைவாக இருக்கிறதோ அந்தப் பகுதிகள், மற்ற இடங்களைக் காட்டிலும் முதலில் தெரிந்தெடுக்கப் பட வேண்டும். சில வட்டாரங்களில் இந்தத் திட்டத்தின்கீழ் குழந்தைகளைப் பள்ளியில் சேருமாறு தூண்டுவது ஒருபுறம் இருக்க, இதர வட்டாரங்களில் சாதாரணமாக பள்ளிகளில் சேர வருவோர் விஷயமும் தக்கபடி கவனிக்கப்பட்டு வகை செய்யப் பட வேண்டும். திட்டத்தை அமுல் நடத்தும் வேலையை கவனிக்கும் பொறுப்பு, கல்வித் துறையிடமே தொடர்ந்து இருந்துவர வேண்டும்.

பள்ளி நிர்வாக அமைப்புகள் பிரச்சினையைக் கூர்ந்து கவனிப்பது அவசியமாகிறது. பிரைவேட் மானேஜ்மெண்டுகள் தக்க முறையில் நிறுவப்பட்டுள்ளனவா என்பதைக் கவனிக்க வேண்டிய அதிகாரம் அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும்.

— சு. மி. (7-12-57)

# கல்வித் துறையிலும் அரசியல் நஞ்சு

‘மாணவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்; அவர்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்வதில் அக்கறை காட்ட வேண்டுமே தவிர, அரசியலைப் பற்றி சிந்திக்கக் கூடாது. அவர்கள் எதிர்கால அரசியல் தலைவர்களாக வருவதற்கான அறிவு முதிர்ச்சி பெறுவதில் கவனம் செலுத்துவதை விட்டு, இன்றைய அரசியல் தலைவர்களின் பின்னால் செல்வது கூடாது; அது ஆபத்தானது,’ என்று நமது நிதியமைச்சர் அடிக்கடி முழக்கமிடுகிறார். ஆனால் முழக்கமிட்ட அடுத்த விநாடியே மாணவர்களை அரசியலுக்கு இழுக்கிறார். காங்கிரஸ் சார்புடைய மாணவர்களையெல்லாம் திரட்டி, மாணவர் காங்கிரஸ் என்றதொரு அமைப்பைத் துவக்கி வைக்க முன்வருகிறார். அவருடைய விசித்திரப் பண்புகளில் இதுவும் ஒன்று. முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதும் பணியாற்றுவதும் அவருக்கு இயற்கையாகப் போய் விட்டது.

கல்வித் துறையையும் இந்தச் சீர்கேடான நிலைக்கு இழுத்துச் செல்ல அவரும் அவரது காங்கிரஸ் ஆட்சியினரும் இன்று முற்பட்டிருப்பது கண்டு யாரும் கவலைப்படாமல் இருப்பதற்கு இல்லை. அறிஞர் பலரும் இந்தப் போக்கைக் கண்டு, சென்னையின் சிறந்த கல்வித் திட்டத்திற்கு எங்கே சிதைவு தோன்றிவிடுகிறதோ என்று அச்சப்படுகிறார்கள். இதுவரை, அகில பாரதத்திலுமே, சென்னையின் கல்வித் திட்டம் மிகச் சிறப்புடையதென்றும், நுண்ணறிவு படைத்த மேதைகள் பலரை நாட்டுக்குத் தரக்கூடிய வகையில் அமைந்துள்ள நல்லதொரு திட்டம் என்றும் பெருமையுடன் பேசப்பட்டு வந்த நிலைக்கு எங்கே இழுக்கு ஏற்பட்டு விடுகிறதோ என கல்வி நிபுணர்களனைவரும் கருதுகிறார்கள்.

மாணவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கிளிப்பிள்ளைகளைப்போல் ஓயாமல் கூறிக்கொண்டு வரும் காங்கிரஸ் கட்சியினர், அந்த மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியும் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக —அரசியல் கட்சிக் கொள்கையின் கலப்பற்றதாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் ஏனோ மறந்து விடுகிறார்கள். மாணவர்கட்குப் புகட்டப்படும் கல்வித் திட்டத்தை, அரசியல் நோக்கங்களுக்கேற்ப தயாரித்துக்கொண்டு, அந்தத் திட்டத்தின்படி மாணவர்கட்குக் கல்வி புகட்டப்படுமானால், அந்தக் கல்வியறிவைப் பெறும் மாணவர்கள் எப்படி.

அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க முடியும்? ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து செங்கோல் பிடித்திருப்பவர்கள், தமது சொந்த கட்சியின் நன்மைக்கு உகந்ததாகக் கல்வித் துறையில் எந்த மாற்றமும் செய்வது கூடாது; அப்படிச் செய்வது ஆபத்தானது; வெறுக்கத்தக்கது. ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கோ எப்போதுமே அந்த அரசியல் கண்ணியம் இருந்ததில்லை.

மாணவர்களை, முழுக்கமுழுக்க, ஒருகாலத்தில் அரசியல் போராட்டங்களில் ஈடுபடுத்தி, ஏனைய அரசியல் கட்சித்தலைவர்களையெல்லாம் ஏசவும், பேசவும் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் காங்கிரஸ்காரர்கள். வேண்டாததற்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டி அவர்களது கல்வி வளர்ச்சிக்கு ஊறு விளைவித்தவர்களும் அவர்களேதான். விடுதலை வேட்கையால், மாணவர்களும் அவைகளையெல்லாம் செய்வதற்குச் சற்றும் தயங்கியதில்லை. ஆனால், தேசம் விடுதலை பெற்றபின், மக்களுக்குக் காங்கிரஸ் ஆட்சியினால், உழைப்புக் கேற்ற ஊதியமும், தேவைக் கேற்ற வசதியும் கிடைக்கவில்லை என்பதையும், அந்த உரிமைகளைப் பற்றிப் பேசுகின்றவர்கள் மீது அடிக்கடி துப்பாக்கி வேட்டுகள் கிளப்பப்படுவதையும், சில நேரங்களில் அந்த உரிமைக்குரல் எழுப்புவோரின் உயிர்களும் குடிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் உணர்ந்த பிறகு, அந்தக் கட்சியினிடம் அவர்கட்கு இருந்த நம்பிக்கை அறவே அற்றுப்போக, நாட்டின் உண்மையான விடுதலைக்கு உழைக்கும் திராவிட இயக்கத்தவர்களோடு தொடர்பு கொள்ளவும் ஆதரவு தரவும் முற்பட்டிருக்கிறார்கள். என்றாலும், திராவிட இயக்கத் தலைவர்கள், காங்கிரஸ்காரர்களைப் போல, அவர்களை முழுக்க முழுக்க அரசியலில் பங்கு கொள்ளுமாறு தூண்டுவது இல்லை. அறிவு வளர்ச்சியிலேயே முழு அக்கறையும் காட்டும்படியும், தம் கட்சிக்கொள்கைகளிடம் அனுதாபம் மட்டும் கொண்டிருந்தால் போதுமென்றும் அவர்கள் கூறி வருகிறார்கள். என்றாலும், காங்கிரஸ் தலைவர்களுக்கு, இந்த இயக்கத்திடம் மாணவர்கள் அனுதாபம் காட்டுவதையே பொறுக்க முடியவில்லை. 'மாணவர்களே! அரசியலை விட்டு விலகி இருங்கள்! நீங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்' என்ற அறிவுரையை, கல்லூரி தோறும் சென்று கூறிக்கொண்டு வருகிறார்கள். அந்த நல்லுரையை வரவேற்கிறோம். அதே நோக்கில் கல்வித் திட்டத்தில் புகுத்தப்படும் கட்சி அரசியலை நாம் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை.

உயர்தரக் கல்விக்கும், பல்கலைக் கழகக் கல்விக்கும், பொறியியல் விஞ்ஞானம் மருத்துவம் ஆகிய பலதுறைப்பட்ட கல்வி வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்திருப்பதுதான் ஆரம்பக்கல்வி. அந்த ஆரம்பக் கல்வித் திட்டத்



தில் அரசியல் நோக்கம் அறவே கூடாது. ஆனால், காங்கிரஸ் ஆட்சியில் நடப்பது என்ன? ஆரம்பக் கல்வித் திட்டத்தில் ஆதாரக் கல்வி என்பது புகுத்தப்பட்டிருக்கிறது. தம் பிற்கால வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கேற்ற ஒரு ஆதாரத் தொழிலை அங்கே கற்றுக் கொடுக்கிறார்களாம், அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு. பஞ்சு அடித்தலும், பட்டை போடுவதும், நூல் நூற்றலும், நெசவு செய்தலும்தான் கற்றுக்கொடுக்கப்படும் முதல் தொழில். அதற்கடுத்தபடி தச்சுவேலை முதலிய ஏனைய சிறு தொழில்களும் விவசாயமும். கதர் இந்த நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய தொழிலல்ல என்பது பெரும்பாலான மக்களுடைய கருத்தாகும். என்றாலும், அந்தக் கருத்துக்கு சிறிதளவு மதிப்பும் தராமல் இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஆதாரக் கல்வியை எல்லா இடங்களிலும் புகுத்தி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு பெருங்கேடு செய்து வருகிறார்கள். அந்தத் திட்டத்தையே இன்னமும் ஆசிரியர்கள் பலரும் கல்வி நிபுணர்களும் மனதார ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குள்ளாக இந்த ஆண்டில் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கட்குரிய பாட புத்தகங்களை அரசியலாரே வெளியிடுவதென்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்த முடிவை சிறந்ததாகவோ, பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவோ சொல்வதற்கில்லை.

பாடபுத்தகங்களை, அரசியலார் வெளியிடுவதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டாலும், அது முற்றும் உண்மையானது என்று ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

அரசியலார் உதவியோடு நடத்தப்படும் இந்தி பிரசார சபையினர் வெளியிட்டுள்ள ஆரம்ப இந்தி புத்தகங்களில், **'பாரதம் நமது தேசம்; பாரத தேசத்தின் அரசியல் மொழி இந்தி; துளசிதாசர் மகா பெரிய கவி'** என்று கூறப்பட்டிருப்பது அரசியல் நோக்கம் உள்ளதல்ல என்று நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இந்தியை அரசியல் மொழியாகக் கொள்வதை இந்தி பேசாத மக்களில் பெரும்பகுதி மக்கள் ஏற்றுக் கொள்ளாதிருக்கிற போது, 'ஹிந்தி ஹமாரா ராஷ்ட்ர பாஷா ஹை'—இந்தி நமது தேசிய மொழியாகும் — என்று சிறுவர்கட்குப் பாடம் புகட்டுவது எவ்வளவு தவறானது என்பதை நாம் கூறவே தேவை இல்லை. அன்றியும், இந்தத் தமிழகத்தில் உள்ள குழந்தைகள் அனைவரும் ஔவையார், திருவள்ளுவர் ஆகிய புலவர்களையே பெரும் புலவர்களாக இதுவரை மனதில் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பெரும் புலவர்கள் அல்ல, துளசிதாசர்தான் மகா பெரிய கவி என்ற எண்ணத்தை

அந்தப் பிஞ்சு உள்ளத்தில் படிய வைப்பது அரசியல் நோக்கம் உள்ளதல்ல என்று எப்படிச் சொல்லிவிட முடியும்? அரசியல் ஆதரவு பெற்ற ஒரு தனி ஸ்தாபனம் வெளியிடும் பாடபுத்தகங்களிலேயே, இத்தகைய சூது புதைந்து கிடக்கிறபோது, அரசியலாரே நேரடியாகத் தம் சொந்தப் பொறுப்பில் புத்தகங்களை வெளியிடத் தொடங்கினால், அந்தப் புத்தகங்களில், தம் கட்சிக் கருத்துக்களுக்கு இடந்தரமாட்டார்கள் என்று எப்படி அறிஞர்கள் ஏற்றுக்கொள்ள முடியும்?

அன்றியும், இன்று போட்டி மனப்பான்மையில் பல பதிப்பாளர்கள், புத்தகங்களை வெளியிடுவதால், ஒன்றைவிட ஒன்று உயர்ந்ததெனக் காட்டிக் கொள்வதற்காக, சிறந்த கருத்துக்களை அழகான அமைப்புகளோடு, பல நிறப்படங்கள் விளங்க, குறைந்த விலையில் புத்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள். அரசியலார் இந்தப் பணியை மேற்கொண்டால், நிச்சயம் அந்த அழகும், பொலிவும், சிறப்பும் குறைந்துவிடும் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. சந்தேகம் சிறிதாவது இருப்பவர்கள், அரசினர் நடத்தும் பஸ் வண்டிகளைப் பார்த்தால் உண்மையைப் புரிந்துகொள்ளலாம். டி. வி. எஸ். முதலிய பல தனிப்பட்டவர்களின் பஸ் வண்டிகளையும், அரசினர் வண்டிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அரசினர் வண்டிகள் பார்ப்பதற்கு அழகாக இல்லாதது மட்டுமல்ல, பல அடிக்கடி முரண்டு செய்பவைகளாகவும், நடுவீதியை விட்டு திடீரென நகர மறுப்பவைகளாகவும், காயலான் கடைக்குப் போக வேண்டிய என்னை கசக்கிப் பிழிகிறீர்களே என்று கத்துகின்றவைகளாகவும் இருப்பதை பொது மக்கள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தனிப்பட்டவர்கள் பஸ் நடத்திய போது இருந்ததைவிட, கட்டண விகிதம் இரண்டு மடங்கு அரசினர் கைக்கு மாறியபின் ஏற்றப்பட்டுவிட்டதென்பதை அறிபவர்கள் பாடப் புத்தக வெளியீட்டிலும் அந்த நிலை ஏற்படாது என எப்படி நம்பமுடியும்? ஆகவே, நல்ல புத்தகங்களாகவும் வெளிவர முடியாமல், விலையும் அதிகமாகக் கொடுக்கும்படி ஏற்படக்கூடிய இந்த மாற்றத்தைப் பொதுமக்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதோடு, தம் சொந்த கட்சியின் நலனைக் கருதியே இந்தத் திட்டம் அரசினரால் கைக்கொள்ளப்படுகிறது என்ற பொதுமக்களின் எண்ணம் மேலும் வலுப்பெறும் என்பதையும் நாம் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம்.

—"போர்வாள்"

---

சென்னைத் தமிழாசிரியர் கழகம்,
,17, இரத்தின முதலி தெரு, சென்னை—1.
3—12—57.

# கனம் கல்வி அமைச்சர் அவர்கள்,

## சென்னை மாநிலம்

---

தமிழ்ப்பெருந்தகையீர்,

விஷயம்: *அரசியலார் பாடப் புத்தகங்கள் வெளியிடும் திட்டம்*

பள்ளிகளுக்கு உரிய பாடப் புத்தகங்களை அடுத்த ஆண்டு முதல் படிப்படியாக வெளியிட அரசியலார் செய்துள்ள முடிவு அண்மையில் சட்ட சபையில் வெளியிடப்பட்டதை அறிந்து நாங்கள் பெரிதும் துணுக்குற்றோம். அரசியலாரின் இம் முடிவால் பெரிதும் பாதிக்கப்படுபவர்களில் முன்னணியில் வைத்து எண்ணத் தக்கவர்கள் ஏழைத் தமிழாசிரியர்களே என்னும் முறையில் எங்கள் தாழ்மையான கருத்துக்களைத் தங்களின் அருட்பார்வைக்கு மிக்க பணிவுடன் கொண்டு வருகின்றோம்:

1. ஆரம்பப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றிற்குத் தமிழ், கணிதம், விஞ்ஞானம் முதலிய எல்லாப் பாடங்கட்கும் நூல்கள் இயற்றும் ஆசிரியர்களின் தொகை 1,500-க்கு மேற்பட்டதாம். ஆயின், பிற பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் தேவைப்படுவது, ஒவ்வொரு புத்தகமே. தமிழுக்கு மட்டும் தமிழ் வாசகம், இலக்கணம், துணைப்பாடம் என ஒவ்வொரு வகுப்புக்கும் மூன்று நூல்கள் தேவைப்படுவதால் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் இயற்றுபவரின் எண்ணிக்கை மேலே குறிக்கப்பட்ட 1,500-ல் ஏறத்தாழ பாதி என்பது நன்கு கவனித்தற்குரியதாகும். 1948-ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு வரை, அரசியலார் ஆண்டுதோறும் வெளியிட்டுள்ள பாடப் புத்தகங்களின் தொகுப்புப் பட்டியல் (Consolidated list of text books)களைக் கொண்டு கணக்கிட்டால் தமிழ்ப்பாடப் புத்தகங்களும், இலக்கண நூல்களும் இயற்றிய தமிழாசிரியரின் தொகை இருநூற்றுக்கு மேற்பட்டது என்பதும், துணைப்பாட நூல்கள் எழுதியவரின் தொகை நானூற்றுக்கு மேற்பட்டது என்பதும் புலப்படும். பள்ளியிற்பெறும் சம்பளத்தைத் தவிர, பிற ஆசிரியர்கள் போலத் தனிப்போதனை (Private tuition) முதலியவற்றின் மூலம் வேறு வகையில் வருமானம் பெறுவதற்கு

வழியற்ற நிலையில் நூல்கள் எழுதிப் பிழைக்கும் இத்தனை தமிழாசிரியர்களுக்கும் இன்னல் இழைக்கக்கூடியது அரசியலாரின் திட்டம் என்பதை மிக்க பணிவுடன் எடுத்துக்காட்ட விழைகின்றோம். பாடப் புத்தகங்களை அரசியலார் வெளியிடுவார்களாயின், நூல் எழுதும் வாய்ப்பு ஒரு சிலருக்குக் கிடைக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இவ்வாய்ப்புக் கிடைக்காதவர்களின் பேரெண்ணிக்கையை நோக்க, வாய்ப்புக் கிடைக்கப்பெறும் ஒரு சிலரின் நிலையைக் கண்டு மகிழ்வதற்கில்லை. எனவே, இத்திட்டம் தமிழாசிரியர் பலர் துன்பத்தில் உழலத் துணைபுரிவதாக அமையும் என்பது எங்கள் தாழ்மையான கருத்தாகும்.

2. பள்ளிகளில் துணைப்பாட நூல்களாக அமைக்கப்படுகின்றன என்பதனாலேதான், தமிழில் உரைநடை நூல்கள் ஆண்டுதோறும் எண்ணற்றனவாக வெளிவருகின்றன. புராணக்கதைகளும் வரலாற்றுக் கதைகளும் மலிந்து விட்டமையால், இலக்கியம், விஞ்ஞானம், மொழி பெயர்ப்பு முதலிய புதிய துறைகளில் தமிழ்த் துணைப்பாட நூல்கள் தோன்றி, தமிழ் மொழிக்கு ஆக்கமளித்து வரும் இந்நிலையில், அரசியலாரின் புதிய திட்டம் இவ்வாக்கத்தைச் சிதைப்பதாக அமையக்கூடும் என்பது எங்கள் எளிய கருத்தாகும். சுருங்கக் கூறவேண்டுமானால், ஓரிரு ஆண்டுகளுக்குப்பின், பொது நூல் வெளியீட்டகத்தார்கள் வெளியிடும் காதற் கதைகளைத் தவிர, மாணவ, மாணவியருக்கு ஏற்ற நல்ல உரைநடை நூல்கள், பள்ளி நூல்நிலையங்களுக்குக் கிடைப்பது அருமையாகிவிடும் என்பது உறுதி. அரசியாலார் வெவ்வேறு வகுப்புக்களுக்கு ஆண்டுதோறும் வெளியிடக்கூடிய சில துணைப்பாட நூல்கள் மட்டும் ஒரு பள்ளியின் நூல் நிலயத்தை நிரப்பப் போதியனவாகா என்பதைப் பணிவுடன் எடுத்துக் காட்டுவது எங்கள் கடமையெனக் கருதுகிறோம்.

3. பாடப் புத்தகங்கள் வெளியிடும் பதிவு பெற்ற பதிப்பகத்தாருள் பலர், ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களோடு பள்ளிப் புத்தக விற்பனை முடிவடைவதால், பிற மாதங்கள் வீணிற் கழியாமல், பள்ளி நூல் நிலயங்களுக்கெனச் சிறந்த தமிழ் இலக்கிய நூல்கள் வெளியிட முற்படுகின்றனர். பாடப் புத்தகங்களை அவர்கள் கையினின்றும் எடுத்துவிட்டால், அப் பதிப்பகங்கள் மூடப்படுமாதலின், இலக்கிய நூல்கள் பல, வெளி வருவதற்கு வாய்ப்பில்லாது போகும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

4. அரசியலாரின் புதிய திட்டத்தால் நாட்டு நலத்துக்கு இன்றியமையாத புத்தக வெளியீட்டுத் தொழில் நசிப்பதோடு, அத் தொழில் வாயிலாகப் பிழைக்கும் நூலாசிரியர்கள் உள்ளிட்ட பலரும், அச்சகத்தாரும், அச்சகத்தில் பணி புரியும் எண்ணற்ற ஏழைத் தொழிலாளரும், ஓவியர்களும், ஓவிய அச்சுக்கள் செய்பவரும், மற்றும் பலரும் வேலையின்றி வருந்த நேரிடும் என்பது அரசியலார் அறியாததன்று.



5. எனவே, பொதுவாகப் பாட நூல்கள் இயற்றும் ஆசிரியர் அனைவரையும், குறிப்பாகத் தமிழாசிரியர்களையும், பேரளவில் தமிழ் மொழி ஆக்கத்தையும் பாதிப்பதாக இத்திட்டம் அமைந்திருப்பதால், இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதுபற்றி மீண்டும் ஆலோசிக்குமாறு கனம் கல்வி அமைச்சர் அவர்களையும், கனம் முதலமைச்சர் அவர்களையும் மிக்க பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

---

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

சீனத் தமிழ் மன்னன் அணைத்து ஆறுதல் உரைத்தான், நாட்டையும் வென்று தருவதாக உறுதி கூறினான், உடனே வீரராசேந்திர சோழன் தன் படைகளை யனுப்பிக் கடாரத்தை வென்று அவ்வரசனுக்கு அளிக்குமாறு அனுப்பினான். இப்போரில் வீரராசேந்திர சோழன் தங்கையின் புதல்வன் முதற் குலோத்துங்க சோழனும் கலந்து கொண்டு கடாரத்தை வென்று அளித்தான். வீரராசேந்திர சோழனின் பெருந் துணையாலும், முதற் குலோத்துங்க சோழனின் உறுதுணையாலும், சோணாட்டுப்படைகளின் நற்றுணையாலும், கடாரத்தை மீண்டும் பெற்று வாழ்ந்தான் நாடிழந்த கடாரத்து அரசன். வீரராசேந்திர சோழனோடு சோழர்களின் காழகத்து வரலாறு ஒருவாறு முடிவுற்றது எனலாம்.

— "மன்றம்"

---

## அறிவுக் கதிர்

ஜாதி, மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம், மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடு விஷம். முதலில் இது தொலைத்தாக வேண்டும்.

சேற்றில் கிடக்கும் செந்தாமரையை வெளியே எடுப்பதுபோல, இந்து மதமெனும் இடுக்கியில் சிக்கிச் சிதையும் நம் சமுதாயத்தை மீட்க வேண்டியது நம் கடமை.

பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்து: பழமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும்; வாலிபர்கள் புத்துலகச் சிற்பிகள் ஆகவேண்டும்.

# சோழர்கள் கண்ட காழகம்

(புகழேந்தி கரிகாலனார்.)

மலாய் நாட்டின் மேல்கரையில், தென்பக்கத்தில், இன்று கெடா என்னும் பெயரமைந்து விளங்கும் மாநிலம், சோழ நாட்டு வரலாற்றிலும், கடைக்காலத் தமிழ்ப் பேரிலக்கியங்களிலும் காழகம் என்றழைக்கப்படும் தமிழ் மாநகரமேயாகும். விசயப் பேரரசு அருமண நாடு, கம்போசம், ஈழ மண்டலம், மலாய்நாடு, மாநக்வார தீவுகள், சாவகம் முதலாய நாடுகளைக் கைப்பற்றி ஆண்ட பொழுது, சூளாமணி வர்மன் என்ற பெயருடைய அரசன் காழகத்தைத் தனது மேலாண்மைக்குக் கீழ் வைத்திருந்தான். இவன், நாகப்பட்டினத்தின்கண் பௌத்தாலயம் ஒன்றைக்கட்டத்துவங்கி முற்றுப் பெறுமல் விட்டான் என்று வரலாறு கூறுகிறது.

சூளாமணி வர்மனுக்குப் பிறகு காழகத்தை அவன் மகன் விசயோத்துங்கவர்மன் ஆளலானான். நாகப்பட்டினத்தில் தனது தந்தையால் துவங்கப்பெற்று முற்றுப் பெறுமல் இருந்த பௌத்தாலயத்தை இவன் கட்டி முடித்தான். இவனுடைய ஆட்சிக்காலம் முடிவடைந்ததும் இவன் மகன் சங்கிராம விசயோத்துங்கவர்மன் காழகத்து மன்னனாக முடியணிந்தான்.

கடற்கரையில் அமைந்திருந்த காழகத்தை இவன் கடாரம் என்ற பெயரில் அழகிய நகரமாகச் சீராக்கினான். தமிழ் நாட்டு வாணிகக் கலங்கள் அணிவகுத்து நிற்பதற்கும், சீனதேயத்து வாணிகக் கலங்கள் வந்து நிற்பதற்கும் கடாரத் துறைமுகத்தை நன்றாக விரிவுபடுத்திக் கட்டினான். இங்கு வரும் வாணிக மக்கள் தங்குவதற்குரிய இருக்கைகள் பல இருந்தன. வழிபாடு நிகழும் கோவிலும், மக்கள் வதியும் சிறிய வீதிகளும் அமைய, கடற்கரைப் பட்டினமாக விளங்கிய கடாரத்தைக் கண்ட தமிழ் மன்னர்கள், "பரக்குமோதக் கடாரம்" என்றும், "குன்று தெண்டிரைக் கடாரம்" என்றும் பாராட்டி மகிழ்வாராயினர்.

இவ்வாறு நலம் பொருந்தி விளங்கிய கடாரத்தைத் தமிழ் நாடும் அறிந்து உறவு கொண்டிருந்தது. சங்கிராம விசயோத்துங்கவர்மனும், இராசேந்திர சோழனும் நட்புறவு கொண்டு நெருங்கிப் பழகினர். இவர்களின் நட்புறவு நெடுங் காலம் வரை நீடித்திருக்கவில்லை. சிலகாலத்திற்குள் இருவரும் பகைமை கொண்டு போர் நிகழ்த்தத் துவங்கினர். இப் பகைமை வளர்ந்து போர் வடிவம் பெறுவதற்குக் காரணம், மக்களின் வாணிக வளர்ச்சியே என்பது தமிழாய்வுத் துறை விரிவுரையாளர் தோழர்



சதாசிவ பண்டாரத்தார் அவர்களின் கருத்தாகும்.

இராசேந்திரனுக்குச் சிறந்த கடற்படை இருந்தது. அன்று கடல் கடந்து பகை நாட்டைத் தாக்குவது நெருக்கடியான நிகழ்ச்சியாக இருந்தும், இவன் மனம் நெகிழ்ந்து விடாமல் கடாரம் நோக்கிக் கடற்படைகளோடு புறப்பட்டான். இவனுடைய கடற்படைக்கு விக்கிரமசோழ சோழியவரையனாகிய அரையன் இராசேந்திரன் என்ற சிறந்த படைத் தலைவன் தலைமை ஏற்றிருந்தான். இப் படைத் தலைவன் உள்ள உரனும், உடல் வலிவும் பெற்று விளங்கியதோடு, காலம், நிலை அறிந்து போர் செய்யும் வல்லமையும் பெற்றிருந்தான். கடாரம் நோக்கி வந்த கடற் படையை எதிர்த்துச் சங்கிராமவர்மன் போர்புரிந்தான். கடற்படை, கரைவரை சென்று கடாரப் படையைப் பிளந்து கொண்டு போரிட்டது. இப் போரில் இராசேந்திர சோழனின் கடற்படையே வென்றது. இத்தகு போர் நிகழ்ந்த காலம் கி. பி. 1025-ஆம் ஆண்டு என்பர் வரலாற்றாசிரியர்கள்.

கடாரத்தைப் பணிய வைத்த இராசேந்திர சோழன், சங்கிராம விசயோத்துங்கவர்மனின் பட்டத்து யானையையும், விஞ்சைய தோரணத்தையும் கவர்ந்து, மலையூர், மாயிருடிங்கம், இலங்கசோகம் முதலாய பகுதிகளையும் தனது மேலாண்மைக்குக் கீழ் அடக்கி ஆண்டான். இதற்கு முன் இவன் கங்கை கொண்டான் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றிருந்தான். இவனது கடாரப் படை எழுச்சியைப் போற்றிக் "கடாரங் கொள்ளுமொரு சோழன்" என்று கூறும் தமிழ் ஏடுகள்.

இராசேந்திர சோழன் மேலாண்மைக் கீழ் அடங்கிய பிற நாடுகளுடன் போர் நிகழ்த்த வேண்டிய இன்றியமையாமை ஏற்படவே, இவன் அப் போர் நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்ளாமல் தனது முதல் மகனாகிய இராசாதிராசனைக் கலந்து கொள்ளுமாறு செய்தான். பிறகு நெடுங்காலம் வரை இராசாதிராசனே தனது தந்தையின் மேலாண்மைக்குக் கீழ் அடங்கிய நாடுகளை ஆளலானான். இவனது ஆட்சிக்காலம் முடிவுற்றதும், இவன் சகோதரனும், இராசேந்திர சோழனது புதல்வர்களுள் ஒருவனுமாகிய வீரராசேந்திர சோழன் முடியணிந்தான். இவன் காலத்தில் கடாரத்தை ஓர் அரசன் ஆண்டு கொண்டிருந்தான். அப்பொழுது கடாரம் வீரராசேந்திரசோழனுக்குக்கீழ்ப்பட்டிருக்கவில்லை. ஆனால் நட்புறவு இருந்திருக்கலாம். பிறிதொருபொழுது பிற நாட்டரசன் கடாரத்தைக் கவர்ந்து கொள்ளவே கடாரத்தரசன் வீரராசேந்திர சோழனிடம் அடைக்கலம் புகுந்தான். நாடு இழந்து சோழநாட்டில் வந்து அடைக்கலம் புகுந்த கடாரத்தர

(39-ம் பக்கம் பார்க்க)

# திருமதி தாரா செரியன்

சென்னை நகரம் முதன் முறையாகப் பெண் குலத்துக்குப் பெருமையளித்து கௌரவித்தது. பாரதியாரின் நீண்ட நெடுநாளைய கனவு இன்று நனவாகியது. 'பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா!' என்று விடுதலை முரசம் மகிழ்ச்சியொலி எழுப்பியது.

சென்னை நகரச் சரித்திரத்திலே முதல் தடவையாகத் திருமதி தாரா செரியன் மேயர் பதவியை அடைந்திருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் பெண் குலத்துக்கு அளிக்கும் பெருமை இதிலிருந்து நன்கு விளங்குகிறதல்லவா?

அல்லும் பகலும் அனவரதமும் பெண் மக்களின் நல்வாழ்வுக்காகவே அரும்பணி புரிந்து வருகிற திருமதி தாரா சென்னையில் 1913-ம் வருஷம் மே மாதம் 28-ந் தேதி பிறந்தார். அவரது குடும்பம் சென்னையில் நீண்ட நெடுங்காலமாக வசித்து வருகிற குடும்பம். போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. டி. ஐ. ஜேசுதாசன் அவர்களின் புதல்வி இவர். சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் கல்வி பயின்று திருமதி தாரா பி. ஏ. பட்டம் பெற்றார். தாம் பெற்ற கல்விச் செல்வத்தை இவர் வீணாக்காமல், பல கல்வி நிலையங்களின் வளர்ச்சிக்குப் பயன் படுத்தி வருகிறார்.

சென்னை சர்வகலாசாலை செனட் சபையில் அங்கத்தினராக அமர்ந்து கல்வித் தொண்டு புரிந்திருக்கிறார். சென்னை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, லேடி வெலிங்டன் கல்லூரி இவற்றின் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினராக இருந்து இவர் ஆற்றிய அருஞ்செயல்கள் பல.

பிரசித்தி பெற்ற சென்னை எழும்பூரிலுள்ள மாதர், குழந்தை நல ஆஸ்பத்திரியின் ஆலோசனைக் குழுத் தலைமைப் பதவி இவரை நாடி வந்ததென்றால் இவரது தொண்டின் சிறப்புக்கு வேறு அத்தாட்சி வேண்டியதில்லை.

ரஷ்யா, சீனா, உஸ்பெக் முதலிய வெளி நாடுகளிலிருந்து பல கலைத் தூதுவர்கள் நம் நாட்டுக்கு விஜயம் செய்தனரல்லவா? விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கும் பணி திருமதி தாரா செரியனிடம் வந்தடைந்தது. சென்னையில் வெளிநாட்டுத் தூதுவர்களை அகமும் முகமும் மலர வரவேற்று உபசரித்துப் பெரும் பாராட்டுதலைப் பெற்றார் திருமதி தாரா.

வெள்ளம், பஞ்சம் முதலிய உற்பாதங்களால் அல்லலுறும் மக்களின் துயரைத் துடைக்கும் பிரதம மந்திரி தேசீய நிவாரண நிதிக்கு ஏராளமான நன்கொடை வசூலித்துக் கொடுத்திருக்கிறார்.

சென்னை மேல்சபையின் அக்கிராசனராக இருந்துவரும் டாக்டர் செரியன் அவர்களின் மனைவியார் திருமதி தாரா. அவர் வைத்தியத் துறையில் பெரும் புகழ் ஈட்டினார். டாக்டர் செரியன் அவர்களைப் போலவே, திருமதி தாரா செரியன் மாதர் நலனுக்குத் தொண்டு புரிந்து நற்பெயர் சம்பாதித்திருக்கிறார். எழும்பூர் மாதர், குழந்தை நல 'ஆஸ்பத்திரிக்காக ஒரு 'பிளாக்' இவரது பெரு முயற்சியினாலேயே நிறுவப்பட்டது. ஹரிஜனக் குழந்தைகளுக்காகச் செய்யூரில் ஒரு உணவு விடுதியைத் துவக்கி வைத்து அறத்தொண்டு புரிந்தார். சென்னை நகரத்திலுள்ள பல மாதர் நல ஸ்தாபனங்கள் இவரது சேவையை பெற்றிருக்கின்றன.

சென்னை நகரசபைக்குச் சென்னை சர்வகலாசாலையின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி தாரா ஆல்டர்மனாகவும் இருந்திருக்கிறார். விளையாட்டுக் கலையிலே திருமதி தாராவுக்கு அபாரப் பிரியம். டென்னிஸ், கிரிக்கெட் முதலிய விளையாட்டுக்களில் மிகுந்த ஈடுபாடு இவருக்கு.

இங்கிலாந்து, அயர்லாந்து, ஐரோப்பா முதலிய உலகிலுள்ள பல தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து அங்குள்ள சமூக நல ஸ்தாபனங்களின் வேலை முறைகளை யெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறார். அயல்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் டிவேலராவையும், போப்பாண்டவரையும் சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. பிரிட்டனுக்கு விஜயம் செய்தபோது, அங்குள்ள ஸ்தல ஸ்தாபன முறையை அறியும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பெண் சமூக நலத் தொண்டும், கல்விப் பணியும் ஆற்றியுள்ள திருமதி தாரா செரியன் சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டுகிறோம். பெண் குலத்துக்குப் பெருமையளித்த சென்னை நகரசபைக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

—"கல்கி"

## அறிவுக் கதிர்

எந்தக் காலம் வரை, இன இழிவுக்குத் துணை நிற்கும் ஏடுகளைக் காப்பாற்ற ஒரு கூட்டம் இருக்கிறதோ, அதுவரையில் தமிழர் நிலைமை தாசர் நிலையாகத்தான் இருக்கும்,

பொருளாதாரத் துறையிலே மட்டுமல்ல, அறிவுத் துறையிலேயும் விடுதலை வேண்டும். ஒன்றுக்காக மற்றொன்றை விட்டு விடுவதோ, மட்டமாக மதிப்பிடுவதோ கூடாது—இரண்டும் தேவை.

# சிரியா

(மதனகோபால்)

மத்திய கிழக்கிலே போர் மூளுவதின் பயங்கர அறிகுறிகள் தென்படுகின்றன. அதற்கு முக்கியமான காரணமாக இரு நாடுகளைக் கூறலாம். ஒன்று சிரியா, மற்றொன்று துருக்கி. சிரியாவிற்கு ரஷ்யர்கள் உதவுவதும், துருக்கிக்கு அமெரிக்கர்கள் உதவுவதும் தெரிந்ததே.

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களை இணைக்கும் பாலத்தின் நடு இடமாக சிரியா இருப்பதே அது வல்லரசுகளின் கவனத்தில் இருக்கும் காரணம். இப்பொழுது மட்டுமல்ல பல்லாண்டுகட்கு முன்னிருந்தே சிரியா பல பெரும் அரசுகளின் கவனத்தைக் கவர்ந்து ஒரு போர்க்கள நாடாகவே காட்சியளித்து வந்தது.

எகிப்தியர்கள், அசிரியர்கள், பெர்சியர்கள் ஆகியோரின் நாடு பிடிக்கும் ஆசைக்கு பலியாகியிருந்தது சிரியா. பின்னர் 312 கி. மு.வில் மாவீரன் அலெக்சாந்தரால் கைப்பற்றப்பட்டது. ஆன்டியோக்கைத் தலைநகராகக் கொண்டு ஆளப்பட்டது மாசிடோனியரால்.

கி. மு. 64-ல் ரோமானியர்களால் கைப்பற்றப்பட்டு ஆளப்பட்டு வந்தது, சிரியா. அது ரோமர்களின் கையில் 636 கி. பி. வரை இருந்தது. பின்னர் படையெடுத்து வந்த அராபியர்களின் கையில் சிக்கியது. அதற்குப் பிறகு சிரியா முஸ்லிம் உலகத்தின் முக்கியமானதொரு பகுதியாக மாறியது.

பிறகு 1516 கி. பி.யில் சுல்தான் சலீம் தன்னுடைய ஒட்டோமான் படையுடன் சிரியாவைப் பிடித்து அரேபியா, எகிப்தையும் ஆக்ரமித்துக் கொண்டார். அதற்குப் பின்னர் சிரியா, முதல் உலக யுத்தம் வரை ஒட்டோமான் துருக்கியர் கையில் தான் இருந்தது.

அதற்குப் பின்னர் அது 'நேச' நாடுகளின் வசமானது.

1920-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ம் நாள் ஹுஸ்ஸெய்னின் மகனை 'பெய்சல்' என்பவர் சிரியாவின் மன்னனாக சிரியன் காங்கிரசாரால் முடிசூட்டப்பட்டார். ஆனால் அவர் ஆட்சி சொற்ப காலமே நீடித்தது. நேச நாட்டினர் சான்ரெமோ மாநாட்டில் "சிரியா, லெபனன் இரு நாடுகளும் பிரெஞ்சு அரசாங்கத்தால் ஆளப்படவேண்டும்" என்று தீர்மானித்தனர்.

இந்தத் தீர்மானத்தை 1922 ஜூலை 24-ம் நாள் வரை 'ஐக்கிய நாடுகள் சங்கம்' அங்கீகரிக்கவில்லை. ஆனாலும், பிரெஞ்சு நாட்டினர் 1920 ஜூலை 25-ம் நாளே டமாஸ்கஸ்ஸில் நுழைந்துவிட்டனர். தொல்லைகள் மிக ஏற்ற இந்த நாட்டின் சரித்திரத்திலேயே இந்தப் பிரெஞ்சு நாட்டினரின் ஆட்சி ஒரு துக்ககரமான நிகழ்ச்சியே.

பிரெஞ்சு ஏகாதிபத்யக் கொடுமை மக்களின் உள்ளத்தைக் கிளறிப் புரட்சி செய்யத் தூண்டியது. 1925 ஜூலையில் மக்கள் தங்கள் அதிருப்தியை தெரிவிக்கும் முகத்தான் பொதுப் புரட்சி செய்தனர்.

புரட்சியை அடக்க பிரெஞ்சு ஏகாதிபத்யவாதிகள் பல வழிகளைக் கையாண்டனர். டமாஸ்கஸ் மீது குண்டு போட்டும், நகரங்களைக் கொளுத்தியும், தண்டனையும் அபராதமும் போட்டும் புரட்சியை அடக்கப் பார்த்தனர். சந்தனம் அரைக்க, அரைக்க மணப்பதுபோல் புரட்சியும் அடக்க, அடக்க பெரும் அளவில் வளர்ந்தது. பிரெஞ்சு ஏகாதிபத்ய வாதிகளின் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்ட மற்ற உலக நாடுகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தன. உடனே பிரெஞ்சு அரசாங்கத்தார், எம். டி. ஜுவனல் என்பவரை ஓர் உடன்படிக்கைக்கு இணங்க வைக்க அனுப்பியது. அவர் தோல்வியுடன் திரும்பினார், சிரியாவில் சில அழிவுச் செயல்களையும் செய்துவிட்டு. அவருக்குப் பின் பான்காட் என்பவர் சென்றார். அவர் ஒருவித உடன்படிக்கைக்கு வரச் செய்தார்.

அதன்படி தேர்தல் நடந்தது 1928-ல். 1930 மேத் திங்களில் சட்டசபையைக் கலைத்துவிட்டார் பிரெஞ்சு அரசாங்கத்தைத் தலைமைப் பீடமாக அச் சட்டசபை ஏற்காததால்.

"பிரண்ட் பாபுலேர்" என்னும் கட்சி 'பிளம்' என்பவரின் தலைமையில் ஆட்சிக்கு வந்தது. அது ஒரு திருப்பு முனையாக ஆனது, பிரெஞ்சு, சிரியா உறவுக்கு செப்டம்பர் 1936-ல் ஒரு உடன்படிக்கை "பிராங்கோ சிரியன் உடன்படிக்கை" குவய்டி ஆர்சேயில் எழுதப்பட்டது. சிரிய சட்டமன்றத்தால் இந்த உடன்படிக்கை ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் பல பெரிய பிரெஞ்சு அதிகாரிகளாலும், அரசியல்வாதிகளாலும் அது எதிர்க்கப்பட்டதால் அந்த உடன்படிக்கை பிரெஞ்சு அரசாங்கத்தாரால் கைவிடப்பட்டது.

1938 ஜூலை 4-ம் நாள் பிரெஞ்சு துருக்கியிடம் ஓர் உடன்படிக்கையை "சிரியாவின் வடபகுதியான அலெக்சான்டெரட்டாவின் சன்ஜாக்கை பிரெஞ்சும், துருக்கியும் ஒன்றாக ஆள்வது" என்று ஏற்படுத்திக்கொண்டது. இது சிரிய மக்களிடம் பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியது. அது மட்டுமன்று; பிரெஞ்சு அலெக்சான்டெரட்டாவை துருக்கிய அரசாங்கத்திற்கே அளித்துவிட்டது. இது தான் சிரிய, துருக்கியிடம் பிள

வையும், வெறுப்பையும் உண்டு பண்ணியது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது சிரியா மறுபடியும் போர்த் தளமாக மாறியது. பிரெஞ்சின் சரணுக்குப் பிறகு சிரியாவில் இருந்த பிரெஞ்சு ஹைற கமிஷனர் பிரெஞ்சு அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டு சிரியா, லெபனனிற்கு வந்த ஜெர்மன் தூதுக் குழுவை வரவேற்ருர்.

1941-ஜூன் 8-ம் நாளில் பிரிட்டிஷ், பிரென்சு படையினர் சிரியாவினுள் நுழைந்து போரிட்டு வென்று, ஓர் உடன் படிக்கை எழுதி வாங்கினர்.

ஜெனரல் காட்ரக்ஸ் சிரியா மக்களுக்கு "பிரெஞ்சி அரசாங்கத்தின் ஆட்சி முடிந்து, சுதந்திர நாடாகிறது சிரியா" என்று அறிக்கைவிட்டார் சுதந்திர பிரான்சின் பேரில்.

போருக்குப் பிறகு சிரியாவில் பல அரசாங்க மாற்றங்களும், இராணுவப் புரட்சிகளும் நடந்தன.

மார்ச் 30-ம் நாளிலிருந்து ஆகஸ்டு 14-ம் நாள் வரை (1949-ம் ஆண்டு) சிரிய படைத் தலைவர் க(ர்)னல் ஹீசன் ஜயாம் என்பவரின் இராணுவ ஆட்சியில் இருந்தது சிரியா.

சிறு காலமே இந்த இராணுவ அரசாங்கம் இருந்தாலும் அது ஒரு பாடம் கற்பித்தது சிரிய மக்களுக்கு. 1949-ம் ஆகஸ்டு 14-ம் நாள் மற்ருெரு இராணுவப் புரட்சி நடந்தது. தற்காலிக அரசாங்கமாக அஷீம் எல் அடாசி என்னும் முதிர்ந்த அரசியல்வாதியான பழைய தலைவரின் தலைமையில் ஏற்படுத்தினர்.

1949 நவம்பர் 15-ம் நாள் ஜனநாயக அரசியல் சட்டம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய சட்ட மன்றத் தேர்தல்கள் நடந்தன. சிரியா ஒரு குடியரசு நாடாக இருப்பதா அல்லது 'இராக்'குடன் சேர்ந்து ஒரு நாடாக வாழ்வதா என்றதோர் பிரச்சினை கிளம்பியது.

அதிகமான இடம் பெற்ற "பாபுலா பார்ட்டி'க்காரர்கள் இராக்குடன் இணைந்திருப்பதை விரும்பினர். பெரும்பாலான சுயேச்சை அங்கத்தினர்கள் சிரியா சுதந்திர நாடாக இருப்பதையே விரும்பினர்.

சட்ட மன்றத்திலே இராக்குடன் இணைந்திருப்பது என்று 10 வாக்குகள் (62 வேண்டும் என்றும், 52 கூடாது என்றும்) அதிகமாகப் பெற்று பாபுலர் பார்ட்டி சட்ட மியற்றியது எனினும், அது ஒரு பிளவை உண்டு பண்ணிவிட்டது அக்கட்சியிலும், இராணுவத்திலும். கடைசியில் சிரியா, குடியரசு நாடாகவே இருப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

ஓர் ஆண்டிலேயே மூன்று இராணுவப் புரட்சிக்கு ஆளான சிரியாவில் இனி அமைதி நிலவும், அரசாங்கம் செவ்வனே நடை



பெறும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் நிலைமை வேறு விதமாக மாறிவிட்டது.

1951 நவம்பர் திங்கள் 29-ம் நாள் கர்னல் அபுப்சிஷாக்லி என்பவர் மற்ருெரு இராணுவப் புரட்சிக்கு வித்திட்டு, வெற்றிகரமாக நடாத்தினர். ஆறு மாதங்கள் பொறுத்து, அவரும் விலக்கப்பட்டார். (கடந்த டிசம்பர் திங்களில் சிஷாக்லியும் மற்ற எதிர்ப்பாளர்களும் நீதி மன்றத்தால் தண்டனையளிக்கப்பட்டு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டனர்.)

பிரான்சில் நடக்கும் மந்திரி சபை மாற்றங்கள்போல்தான் சிரியாவிலும் நடந்தன, சிறு வேறுபாடுகளுடன்.

பின்னர் சாப்ரி அஸ்ஸாலி "செகரட்டரி ஜெனரல் ஆப்தி நேஷனல் பார்ட்டி" முதன் மந்திரியானர். அடுத்து பரிஸ் எல் கவ்ரி முதன் மந்திரியானர். மறுபடியும் 1955 பெப்ரவரியில் சாப்ரி அஸ்ஸாலி முதன் மந்திரியானர். ஜூன் 1956 ஆண்டு மூன்ருவது முறைமாக சாப்ரி அஸ்ஸாலி முதன் மந்திரியானர்.

1955 ஆகஸ்டு 18-ம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் இப்போதைய குடியரசுத் தலைவர் சுக்ரி எல் குவாட்லி. அவர் மூன்று முறை தலைவராக இருந்திருக்கிருர். சிரியாவின் தலைவராக பணியாற்றி வரும் சுக்ரி எல் குவாட்லிக்கு அறுபத்து ஐந்து வயதாகிறது.

பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப் பட்ட பாக்தாத் ஒப்பந்தத்தில் இரான் சேர்ந்த மறுநாளே எகிப்தும் சிரியாவும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டன. "நாடுகளின் எல்லைகளிலோ அல்லது படையிலோ அன்னியர் ஆதிக்கம் செலுத்தும் மறுகணமே இரு நாடுகளும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று ஒப்பின. அந்த ஒப்பந்தம்தான் டமாஸ்கஸ் ஒப்பந்தம்.

சிரியாவின் தலைவர் குவாட்லி மாஸ்கோவிற்கு சென்று வந்த பிறகு சிரியாவிற்கு ரஷ்யப் படையும் ஜெட் விமானங்களும் உதவுகிறது என்று அமெரிக்கர் கூறுகின்றனர்.

துருக்கி, ரஷ்யாவின் வலுவான எதிரி, சிரியாவின் படையில் கம்யூனிச விரும்பிகள் பெரும் அதிகாரிகளாக இருப்பதைக் கண்டும், ரஷ்யாவின் உதவியைக் கண்டும் பயமடைந்து அமெரிக்காவின் உதவியுடன் தன் படையைப் பெருக்குகிறது.

அமெரிக்காவின் பக்கம் துருக்கியும், ரஷ்யாவின் பக்கம் சிரியாவும் இருக்கின்றன. இவ்விரு நாடுகளின் பூசலைக் காரணமாக வைத்துக்கொண்டு இவ்விரு வல்லரசுகளும் போர் தொடுக்க முனைகின்றன.

— "திராவிட நாடு"

# Proceedings of the Director of Public Instruction.

## MADRAS.

*Dis. No. 1854-57 Dated 31st Aug. '57.*

Subject: Elementary Education-Aided-Payments of Fee compensation to Aided Schools-clarification regarding.

Ref: From the District Educational Officer, Salem R. O. C. No. 19-H-57 dated 1-4-57, 5-6-57, 28-7-57 and 13-8-57.

From the Divisional Inspector, Coimbatore, R. C. No. 257-E2-57 dated 15-7-57.

With reference to the queries raised by the District Educational Officer, Salem the following instructions are issued for information and necessary action.

Query No. (1) According to the instructions issued in the Director's Proceedings R. C. No. 318-B7-M-53 dated 23-10-53, all fee levying schools should maintain proper accounts and there should be regular fee income through pupils who are not eligible for any concessions. Such schools alone can get the benefit of compensation towards loss of fee Income. If fees are not actually collected from non-eligibles then it is not a fee-levying school and so is not to be paid any fee compensation.

Query No. (2) According to the instrucions issued in the Director's Dis. No. 656-55 dated 15-2-55, managements cannot exempt any pupil from payments of fees other than those who are eligible for such exemption under rules. As such a school which has no regular system of fee collection cannot be considered as "Fee levying Schools."

(Sd) M. D. PAUL
For Director of Public Instruction.

---

*R. C. No. 32-H-57 Dated 4-9-1957.*

Copy communicated.

(2) The instructions issued by the Director should be observed and recommendation for the sanction of the grants for the 1st quarter and II quarter of 1957 should be submitted immediately.

(3) The Deputy Inspectors should submit particulars in the form annexed in respect of each school with their recommendation for payments for the 1st and II quarters of 1957 and in future.



(4) The Deputy Inspector should also furnish the particulars for 1956 separately for each quarter as per Director's instruction and state if any revision or recovery will be necessary.

(5) The statements and particulars referred to in para 2 to 4 above should reach this office before 15-9-57 without fail. It is needless to point out that the payment is already overdue and that every effect should be taken at each stage for quick payment. It is hoped that the Deputy Inspectors will look into the matter personally and see that the statements are submitted in time. Any delay will be viewed very seriously and the defaulters will be taken to task.

(6) The Director's proceedings should be communicated to the managers of all fee levying schools and their acknowledgement obtained.

(Sd) N. RANGASAMY CHETTIAR,
9—8—57
for District Educational Officer, Salem.

To

The Deputy Inspector of Schools in the District.
Copy to. C. No. 33, 34 and 35-H-57.

## காம்பன்சேஷன் விஷயமாக சென்னை கல்வி இலாகா டைரக்டர் அவர்களின் விளக்கங்கள்

---

சேலம் ஜில்லா கல்வி அதிகாரியும், கோயம்பத்தூர் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அவர்களும் கேட்ட கேள்விகளுக்கு சென்னை கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் தன்னுடைய Dis.No. 1854-57 தேதி 31-8-57 ல் கீழ்க்கண்ட விளக்கங்கள் கூறியுள்ளார்.

விளக்கம் (1) 23-10-53 தேதி டைரக்டருடைய போஸ்டிங் R. C. No. 318-137-M-53 பிரகாரம் சம்பளம் வாங்கும் ஆரம்பப் பள்ளிகள் யாவும் சரியான கணக்குகள் வைத்திருப்பதோடு கன்ஷெஷனுக்கு அருகதை இல்லாத பிள்ளைகளிடமிருந்து சரிவர சம்பளங்கள் வசூலிக்கப்படவேண்டும். அப்படி சரிவர வசூலிக்கும் பள்ளிகள் மாத்திரம் காம்பன்சேஷன் பெற லாயக்குள்ளதாகும். காம்பன்சேஷன் அருகதையில்லாத பிள்ளைகளிடமிருந்து சம்பளங்கள் வாங்காவிடில் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் சம்பளம் வாங்கும்

பள்ளிகள் எனக் கருதமுடியாது. ஆகையால் அம்மாதிரிப் பள்ளிகளுக்கு எவ்விதமான காம்பன்சேஷன் தரக்கூடாது.

விளக்கம் (2) 15-2-55 தேதி வெளியிட்ட டைரக்டர் **Dis. No. 656-55** கடிதப்படி விதிகளின்படி சம்பளம் கட்டுவதற்கு விளக்கு அளிக்கப்பட்ட பிள்ளைகளைத் தவிர மற்ற பிள்ளைகளுக்கு ஆரம்பப்பள்ளி மானேஜ்மென்டார் சம்பளம் கட்டுவதிலிருந்து விளக்கு அளிக்கக்கூடாது. அதன்படி ஒரு பள்ளிக்கூடம் சம்பள வசூலில் ஒழுங்கான முறை இல்லையெனில் அப்படிப்பட்ட பள்ளிகள் சம்பளம் வாங்கும் பள்ளிகள் எனக் கருத முடியாது.

---

## அறிவுக் கதிர்

கல்லடிபட்ட கலிலியோ, கடுவிஷங் குடித்த சாக்ரடீஸ், சிலுவையில் அறையப்பட்ட ஏசு ஆகியோர் இன்றும் என்றும் போற்றப் படுபவர். ஏனெனில் அவர்கள் இம்சைக்கு ஆளான இலட்சிய வாதிகள்.

அவருக்கு அது பிடிக்காதே, இவருக்கு இது பிடிக்காதே என்று தலையைச் சொரிந்துகொண்டு யோசித்துப் பணியாற்றுவது என்றால், உலகுக்குப் பயன்படக்கூடிய காரியம் செய்ய முடியாது.

"அன்று எழுதிய எழுத்து" பலப்பல நாடுகளிலே அழித்தெழுதப்பட்டிருக்கிறது—அயனால் அல்ல — ஆற்றல்மிக்க வீரர்களால்! இங்கும், விதி, விரைவில், ஒழியத்தான் போகிறது.

வாலிபர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டிமுனைகள்; நடமாடும் எஃகுக் கம்பிகள். அவர்கள் அகத்திலே ஆர்வமும், முகத்திலே வீரக்களையும், செயலிலே துடிதுடிப்பும் காணப்படும்.

தோழமை! ஆழ்ந்த கருத்துள்ள அழகான சிறு சொல். பேதம் நீங்கிய அல்லது நீக்கப்பட்ட நிலை அல்ல, பேதம் ஏற்படாத நிலை — ஏற்பட முடியாத நிலை தோழமை!

வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை—ஆனால் கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்கவேண்டும் வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

உடையிலே, உணவிலே, வாழ்க்கை வசதிகளிலே நாம் மிக மிக முன்னேறி விட்டோம். ஆனால் உள்ளத்திலே மட்டும் முன்பு கொண்ட மூடநம்பிக்கையையே இன்றும் கொண்டிருக்கிறோம். இது முறையா?

# கருத்தைக் கவரும் காவிரி யாறு

[எம். கே. அரங்கசாமி.]

"எவ்விதமான பக்ஷபாதமின்றி எல்லாருடைய மனோரதங்களையும் பூர்த்தி செய்து கொண்டு நேராக வரும் இந்தக் காவேரியைப் பாருங்கள்" என்று "ஸாரி வெடலின காவேரி நி ஜூடரே" என்ற ஒரு சிறந்த கீர்த்தனத்தில் தியாக ராஜஸ்வாமிகள் காவேரியை வர்ணித்திருக்கிறார். "வேகமாய் ஓர் இடத்தில் ஓடி பயங்கரமான சப்தத்துடன் மற்றோர் இடத்தில் குதித்து நிதானமாக கருணையுடன் ச்ரேஷ்டமான கன்யகாமணி (காவேரி) அசைந்து வந்து கோகிலங்கள் விளையாடிக் கொண்டிருக்கும் 'வண்டினமுரலும் சோலை'யாகிய திருவரங்கத்தில் ரங்கேசனை சேவித்து பஞ்சநதத்திற்கு ப்ரணதார்த்திஹரனை பூஜிக்க வருகிறாள் பாருங்கள். இரு கரைகளிலும் இவளை இராஜ இராஜேசுவரி என்று அழைத்து சிரத்தையுடன் பூஜிக்கிறார்கள் பக்தகோடிகள்."

இப்படி தியாகராஜ ஸ்வாமிகளால் இராஜஇராஜேசுவரி என்றும், கவிச்சக்கரவர்த்தி கம்பனால் பொன்னி என்றும் போற்றப் பட்ட காவேரி நதியில் ஸ்நானம் செய்வது எப்பொழுதும் விசேஷம்தான். ஆனால், இந்த துலா மாதத்தில் ஸ்நானத்திற்கு அதிக மகிமை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த மாதம் பிறந்ததுடன் தென்னாட்டில் உள்ளவர்களுக்கு உண்டாகும் சிறப்பு காவேரி ஸ்நானம்தான். உற்பத்தியில் இருந்து கடல் சங்கமம் வரையில் இந்த புண்ணிய நதியில் அதிகாலையில் நீராடுவது தொன்று தொட்டு வரும் வழக்கம். இப்படிச் செய்ய இயலாதவர்கள் "காவேரியின் நிர்மலமான தீர்த்தத்தில் எப்பொழுது நீராடி பாப மற்றவனாக ஆவேனோ" (கதாஹம் காவேரி விமலஸலிலே வீத கலுஷ) என்கிற எண்ணத்துடன் காவேரித் தாயை தியானித்து காலையில் ஸ்நானம் செய்வார்கள்.

### காவேரியின் சிறப்பு

"மழை மறைந்த காரணத்தால் நாடெல்லாம் பஞ்சத்தால் ஆழ்ந்து பரதவிக்கும் காலத்திலும் குடகு மலையில் மழை தன் வளம் சுரக்க மறுக்காது" என்று சங்கப் புலவர் ஒருவர் பாடியிருக்கிறார். "வான் பொய்ப்பினும் தான் பொய்யாத்" தன்மையுள்ள காவேரி நாட்டை வளம் குறையாமல் செய்து, நெல், கரும்பு, மஞ்சள், பழம், தேங்காய், வெற்றிலை எல்லாவற்றையும் கொடுத்து பொன் விளையும் பூமியாக்குகிறாள். புறநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களில் இந் நதியின் சிறப்பு பல விதமாக [illegible]. பெரிய [illegible] கிழார்

இந்த நதியை பூமகள் மார்பை அலங்கரிக்கும் மாலை யென்று புகழ்ந்திருக்கிறார்.

காவேரி நதிக் கரைகளில் சோழ மன்னர்கள் தங்கள் தெய்வ பக்திக்கு அறிகுறியாக கணக்கற்ற கோயில்களை கட்டி யிருக்கிறார்கள். இதன் தீர்த்தத்தின் அருகில் பிறந்தவர்கள் தாம் சங்கீத மும்மணிகளாகிய தீக்ஷிதர் சியாமாசாஸ்திரிகள் தியாகராஜ ஸ்வாமிகள்.

## இயற்கை எழில்

ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் விதமாய் தோற்ற மளிக்கும் காவேரியின் அழகை வர்ணிப்பது இயலாத காரியம்: அதைப் பார்த்துத்தான் அனுபவிக்க வேண்டும்.

இதன் அழகில் ஈடுபட்டுப் பரவசமடைந்த ஒரு வடமொழிப் புலவன் திருச்சிராப்பள்ளிக் குன்றின் மேல் உள்ள மஹேந்திர பல்லவ மன்னன் அமைத்த குகைக் கோயிலிலுள்ள பார்வதீ பரமேச்வரர்கள் சிற்பத்தைப் பார்த்தான். அவன் மனத்தில் ஒரு விசித்திரமான எண்ணம் உதித்தது. காவேரியின் அழகைக் கண்டு சிவபிரான் இவள் பேரிலும் காதல் கொள்வானோ ஏன்கிற சந்தேகம் பார்வதிக்கு உண்டாகி, அங்கே வந்து "இந்தக் காவேரி பல்லவ அரசரின் மனைவி" என்று [illegible]

காவேரீம் நயனாபிராம ஸலிலாம்,
ஆராமம்மாலாதராம்
தேவோ வீக்ஷ்ய: நதீப்ரிய: ப்ரிய
மப்யேஷ ரஜ்யே திதி, [குணா
ஸா சங்கா விதி கன்யகா பித்ரு
[குலம்,
ஹித்வேவமன்யே கிரௌ
நித்யம், திஷ்டதி பல்லவஸ்யதயி
[தாம்
ஏனாம் ப்ருவாணாம் நதீம்.

[பொருள்: நயனாபிராமஸலிலாம்—கண்களை மகிழ்விக்கக்கூடிய பிரவாகமுள்ளவளும், ஆராமமாலாதராம்—அழகிய தோட்டங்களை மாலையாக அணிந்தவளும், ப்ரியகுணாம் - விரும்பத்தக்க குணங்களும் கூடிய, காவேரீம் வீக்ஷ்ய — காவேரியைக் கண்டு, நதீப்ரிய—நதியில் (கங்கை) ஆசை கொண்டவனான, தேவ—தேவன், பரமசிவன், ரஜ்யேதிதி — காதல் கொள்வானோ, சங்கா - சந்தேகத்தை அடைந்த கிரிகன்யா: பர்வத குமாரியாகிய பார்வதி, பித்ருகுலம்—தன் பிறப்பிடத்தை ஹித்வா: விட்டு விட்டுகிரை: இந்த (திருச்சிராப்பள்ளி) மலையில், நித்யம்: எப்பொழுதும், ஏனாம்நதீம்: இந்த நதி, பல்லவஸ்ய தயிதா: பல்லவ மன்னனின் பிரியமுள்ளவள் என்று, ப்ருவாணாம்—சொல்லிக் கொண்டு, திஷ்டதி: உட்கார்ந்திருக்கிறாள்.]

ஒரு கல்வெட்டில் கிடைத்த இரத்தினம் இந்த ஸ்லோகம். இவ்வளவு சீரும் சிறப்பும் கூடிய இந்த ஆற்றின் உற்பத்தி வரலா[illegible] விசித்திரமானதுதான்.



## புராண வரலாறு

ஆதி காலத்தில் காவேரன் என்ற மன்னன் கடும் தவம் புரிய, நான்முகக் கடவுள் திருப்தியடைந்து திருமாலின் அம்சமுள்ள "விஷ்ணு மாயை, என்ற தம் பெண்ணை அந்த மன்னனுக்கு மகளாக அளித்தார். அந்தப் பெண்மணி தந்தைக்குச் செய்ய வேண்டியவைகளையெல்லாம் செய்து முடித்து தானும் தவம் செய்யலானாள். பக்தவத்சலனாகிய ஸ்ரீமந் நாராயணன் அவள் முன் தோன்றி 'நீ காவேரன் புத்திரி; காவேரி என்று பெயர் வகித்து ஒரு புண்ணிய நதியாகப் பெருகி அண்டினவர்கள் பாவத்தைப் போக்கி, நன்மைகளைச் செய்து கொண்டிருப்பாய் என்று ஆசீர்வதித்து மறைந்தார். பிறகு அகத்தியர் இவளை சைய மலைக்குக் கொண்டுவர, அவர் கமண்டலத்தில் விசேஷ தீர்த்தங்களுடன் சேர்ந்து அதன் மூக்கின் வழியாகக் காவேரி நதியாக உற்பத்தியானாள் என்று ஆக்னேய புராணம் விவரித்திருக்கிறது.

## உற்பத்தி ஸ்தலம்

(தலைக் காவேரி)

மேற்குத் தொடர்ச்சி மலையில் சையமலை என்ற குன்று குடகு நாட்டில் இருக்கிறது. இதற்கு பிரம்மகிரி என்ற பெயர் உண்டு. மேடும் பள்ளமுமாய் செடிகளும் மரங்களுமாய் மூடப் பெற்ற பசுமையான இந்தக் குன்றில் முப்பது அடி சதுரமுள்ள ஒரு குளம் நாலு பக்கங்களிலும் படிக்கட்டுகளுடன் அமைக்கப்பெற்றிருக்கிறது. இதன் வடமேற்கு மூலையின் ஒரு ஊற்றிலிருந்து ஜலம் பெருகிக் குளத்திற்கு வருகிறது. இந்தத் திருக்குளம் எப்பொழுதும் மூன்று அடி ஆழந்தான் இருக்கும், இதற்கு மேல் வரும் நீர் குளத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள த்வாரம் வழியாக இரண்டடி அகலமுள்ள ஓடையாக வெளி வருகிறது. இந்தச் சின்னஞ்சிறு ஓடை இரு கரைகளும் புரண்டோடும் அகண்ட காவேரியாக வியாபிக்கிறது என்பது ஒரு விசித்திரமான விஷயம்தான்.

## காவேரித் தாயின் கோயில்

குளத்திற்கு அருகிலுள்ள ஊற்றின் மேல் சிறு கோயிலை அமைத்து கருணை நிரம்பிய உருவுடன் காவேரியம்மனைப் பிரதிஷ்டை செய்து எப்பொழுதும் எரியும் விளக்கொன்றை வைத்துப் பூஜை நடைபெறுகிறது. இங்கே வருபவர்கள் அம்மனைச் சேவித்து குளத்தில் நீராட வேண்டும். இதற்கு மேற்கே படிக்கட்டுகளை ஏறிப் போனால் சிறு கோயில்களைக் காணலாம். அங்கு ப்ரும்மகீசுரிவரரையும் பரமேசுவரியையும் வணங்கித் திரும்பலாம்.

## தலைக்காவேரி போகும் வழி

தலைக் காவேரிக்குப் போவது சிரமமான காரியமாகத்தான் தோன்றும். ஆனால் போகும்

வழியிலும் தலைக்காவேரியிலும் கிடைக்கும் கண்கொள்ளாக் காட்சிகளைப் பார்த்த பிறகு மற்றொரு தரம் அங்கே போக ஆசை உண்டாகும். மைசூர் நகரத்திலிருந்து பஸ் ஏறி அறுபது மைல் போனால் குடகின் பழைய தலைநகரமான மெர்க்காராவைச் சேரலாம். இங்கு வரும் வழியிலும் மலைமேலிருந்து பள்ளத்தாக்கின் காட்சியும் மிக மனோகரமானது. மெர்க்காராவிலிருந்து பாகமண்டலம் என்கிற தலம் 15 மைல்தான். பஸ்ஸில் போகலாம். இங்கிருந்து கால்நடையாக நான்கு மைல் போனால் தலைக் காவேரியை அடையலாம். அங்கே போய் ஸ்நானம், பூஜைகளை முடித்துக் கொண்டு திரும்பிப் பாக மண்டலத்திற்கு வந்துதான் ஆகாரம் செய்து தங்க வேண்டும், இங்கும் ஒரு சிறு கோயில் இருக்கிறது. அதன் பக்கத்தில் ஓடும் காவேரியில் கனகா என்ற உபநதி சேருகிறது.

## குடகும் காவேரியும்

எல்லோருக்கும் அன்னை என்று கருதப்படும் காவிரி குடகு மக்களுக்கு ஒரு செல்லக் குழந்தை. இங்கு துலா மாதத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு விழாவையே கொண்டாடுகிறார்கள். அதிகப் பிரேமையுடன் தொட்டிலிட்டு வளர்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்காக காவேரியால் ஒருவித லாபமும் இல்லை. நடை வந்ததும் இந்த நதி குடகு நாட்டை விட்டுப் பாறையின் மேல் ஏறி விழுந்து கொண்டு வெளிப்படுகிறாள்.

சித்தப்பூர் என்ற ஊரை அடைந்தவுடன் காவேரி வடக்கே திரும்புகிறாள். பல மலையருவிகள் இதில் சேர்ந்து ஒரு "ஆறு" என்ற உருவத்தையடைந்து மைசூர் ராஜ்யத்தில் பிரவேசிக்கிறாள். இங்கே அணை மேல் அணை கட்டி இந்தக் கன்னிகையைக் கட்டிப்போடப் பார்க்கிறார்கள். அவைகள் யாவற்றையும் நிரப்பி விட்டு மேலும் மேலும் விருத்தியடைந்துகொண்டே ஓடுகிறாள். ஹேமாவதி, லக்ஷ்மண தீர்த்தம் என்ற சிறந்த ஆறுகள் தங்கள் வளங்களையெல்லாம் கொழித்துக்கொண்டு அதில் சேருகிறது. பிறகு காவேரி ஒரு பருவமடைந்த மங்கைபோல் தோற்றமளிக்கிறாள். இங்கிருந்து திப்பு சுல்தான் காலத்திலேயே காவேரிக்கு அணை போட உத்தேசமிருந்தும் அது நாற்பது வருஷங்களுக்கு முன்தான் மைசூர் சர்க்கார் செய்து முடித்தார்கள். இப்படியாக ஏற்பட்டது கிருஷ்ணராஜ சாகரம். காவேரி மங்கைக்கே அலங்கரிக்க ஏற்பட்ட பிருந்தாவனத் தோட்டத்தின் அழகு ஜகப் பிரசித்தமானது.

கண்ணம்பாடியைத் தாண்டி வரும் காவேரி இரண்டாகப் பிரிந்து ஸ்ரீரங்கப்பட்டினத்தையும் அதில் கோயில் கொண்டிருக்கும் அரங்கனையும் வலம் வந்து செல்கிறது. இங்கு லோகபவானி



என்ற சிற்றாறும் அடுத்தபடியாக கம்பினி, சுவர்ணவதி என்ற ஆறுகளும் காவேரியில் சேருகின்றன. இப்படி உருவில் பெரிய நதி உலகப் பிரசித்தி பெற்ற சிவ சமுத்திர நீர் வீழ்ச்சியாக விழுகிறது. இது சாதாரணமாகக் கிடைக்கக் கூடாத காட்சி.

## ஹொகேநகல்

இன்னும் சில உபநதிகள் சேர்ந்து காவேரி சேலம் ஜில்லாவில் பாய்கிறது. இங்கே ஓரிடத்தில் ஆற்றின் நடுவில் பள்ளத்தில் நீர் விழுவதால் நீர் வீழ்ச்சி கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் இதிலிருந்து கிளம்பும் நீர்த்துளிச் சேர்க்கை புகை போல் வியாபித்துக்கொண்டே இருக்கிறது. இவ்விடத்திற்கு ஹொகேநகல் (ஹொக-புகை) என்ற பெயர் வந்தது. இதற்குச் சமீபத்தில் மற்றொரு விசித்திரத்தைப் பார்க்கிறோம். இது வரை கட்டுக்கடங்காமல் ஓடி வரும் காவேரி இரண்டொரு பெரும் பாறைகளின் நடுவில் பதினைந்து அடி அகலத்தில் பாய்கிறது. ஆடு தாண்டக்கூடிய இவ்விடத்திற்கு மேகதாட் (மேக-ஆடு) என்று பெயர். இதற்கு அடுத்தபடியாக மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. பவானி காவேரியில் சேரும் சங்கம ஸ்தலம் மிகவும் புனிதமானது. இதை தென்னாட்டுப் பிரயாகை என்று அழைக்கிறார்கள். அடுத்தபடியாகச் சேருவது அமராவதி நதி.

ஈரோட்டிலிருந்து திருச்சிராப்பள்ளி வரை இரு கரைகளிலும் புரண்டு வழிந்து கம்பீரமாக ஓடும் இந் நதிக்கு அகண்ட காவேரி என்பது சரியான பெயர்தான். திருச்சிக்கு மேற்கே ஏலமனூர் என்ற இடத்தில் காவேரியிலிருந்து கொள்ளிடம் என்ற பெரிய நதி பிரிந்து மறுபடியும் காவேரியின் அருகே பாய்ந்து ஸ்ரீரங்கத்தை ஒரு தீவாக்குகிறது. பிரியும் இடத்தில் மேல் அணை என்றும், மறுபடியும் சேருமிடத்தில் கல்லணையும் கட்டியிருக்கிறார்கள். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே காவிரிக்கு இங்கு ஒரு அணையை சோழ மன்னன் ஒருவன் கருங் கற்களால் கட்டி இருந்தான்.

இது வரை சேர்த்துக்கொண்டு வந்த ஜலத்தை விருத்த சுமங்கலி போல தோன்றி காவேரி கணக்கற்ற கிளை நதிகள், வாய்க்கால்கள் வழியாகப் போக விட்டுச் சோழ நாட்டைச் செழிக்கச்செய்கிறது. ஐந்து ஆறுகள் வரிசையாகப் பாயும் பஞ்சநதம் என்கிற ஐயாறு குடமுக்கு என்கிற கும்பகோணம் முதலிய ஸ்தலங்கள் வழியாக மாயவரத்தருகில் ஒரு மூங்கில் பாலத்தால் தாண்டக் கூடிய ஒரு சிறு கால்வாயாகக் காவேரி காணப்படுகிறது. கடைசியாக மறைந்து போன சோழத் தலைநகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்திற்கருகில் கரவேரி சமுத்திரத்தில் சங்கமம் ஆகி விடுகிறது.

(56-ம் பக்கம் பார்க்க.)

# வெற்றியின் அடித்தளம் தோல்வி

ஜே. ஜே. துரைராஜ், பி. ஏ., எல். டி.

வாழ்க்கை தோல்வியாகிவிட்டதோ என்ற அச்சம் மனதில், தோன்றி, மனித குலத்தில் பிறந்த ஒவ்வொருவனையும் அலசடித்துவிடுகிறது. தோல்வி என்றால் என்ன? வெற்றியின் அடித்தளமே அது. இதை அறியாத அநேகர் அடித்தளத்துடன் கட்டடம் முடிவடைந்து விட்டது என்று எண்ணி, சோர்வடைந்து விடுகிறார்கள். அஸ்திவாரத்திற்குப் பின்தான் மாளிகை ஆரம்பமாகும். அடித்தளத்திலேயே நின்றுவிட்டால், வானளாவும் மாளிகை எங்கிருந்து கட்ட முடியும்?

வைத்திய சாஸ்திரம் இவ்வளவு தூரம் முன்னேறி வந்திருப்பதற்குக் காரணம், வைத்தியர்கள் கண்ட தோல்வியே.கூ சாமல், அநேக டாக்டர்கள் தாங்கள் கண்ட தோல்வியை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள். எனவே அத்துறையில் விருத்தி காண, எக்குண்டுகளையும் பள்ளங்களையும் விலகிப் போகவேண்டும் என்பதை அறிந்துகொண்டார்கள். இந்த அளவில் முன்னேற்றம் சுலபமாக அமைந்துவிட்டது. வென்சில் என்ற கண் வைத்திய நிபுணரைப்பற்றி ஒரு ரசமான காரியத்தைச் சொல்லுவார்கள். ஒரு மரக்கால் கண்களைக் கெடுத்த பின்தான், அவரால் கண் ஆப்பரேஷன் எப்படிச் செய்வது என்று உலகிற்குக் கற்றுக் கொடுக்க முடிந்ததாம்.

இயந்திரங்களை அமைக்கும் ஒரு நிபுணனுக்கு ஒரு தோல்விப் புத்தகம் இன்றியமையாத சாதனமாகும். அப்படி இல்லை என்றால், அவனும் மறுபடியும் மறுபடியும் முன்னவர்கள் செய்த தவறுதல்களையே செய்ய நேரிடும். எடிசன் மின்சார விளக்கில் எரியக்கூடிய இழையைக் கண்டுபிடிக்கப் பட்ட பாடுகள் கொஞ்சம் நஞ்சம் அல்ல. அபஜெயத்திற்கு மேல் அபஜெயம். தவறுக்கு மேல் தவறு. இதைக் கண்ட ஒரு சிநேகிதன் சற்று ஏளனமாய்



பேசினபோது, அப் பெரியார் கொடுத்த பதில் இதுதான்: "இப்பொழுது எனக்கு எந்தெந்த விதங்களில் செய்தால், நிச்சயமாகத் தோல்வி கிடைக்கும் என்று தெரிந்துவிட்டது. இனி அவைகளை விலக்குவதால், கிடைக்கவேண்டிய சித்தி சமீபத்தில் வந்துவிடுகிறது அல்லவா?"

"எனது நுட்பமான ஆராய்ச்சிக்கு அடிகோலாய் இருந்தவை நான் முன்பு அனுபவித்த தோல்வியே" என்று சர் ஹம்பிரே டேவிஸ் என்ற விஞ்ஞானி கூறியிருக்கிறார். எனவே நமக்கு ஏற்பட்ட சில தோல்விகளை அலசிப் பார்த்து, ஆராய்ச்சிக்கு உட்படுத்தி, ஒருவேளை வெற்றிக்கு வேண்டிய வழியை வகுத்துக் கொள்ள முடியும்.

"உலக நாகரிகத்தைப் பாருங்கள். அது எவ்வளவு மகத்தான தோல்வி!" என்று சிலர் கொக்கரிக்கிறார்கள். ஆனால் இந்தப் படுதோல்வியை நமது ஆராய்ச்சிக்கு உட்படுத்தினால், ஒருவேளை நாகரிகத்தை அழிவுப் பாதையிலிருந்து விலகும்படிச் செய்யலாம். யார் கண்டது?

முதன் முதலாவது செய்யப்பட்ட ஆகாய விமானங்கள் எல்லாம் பொத்து பொத்தென்று செத்த காக்கைகள் மாதிரி கீழே விழுந்தன. "என்ன தோல்வி, படு தோல்வியல்லவா?" என்று ஜனங்கள் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டார்கள். சோதனை நடத்தினவர்கள் இத்துடன் சோர்ந்து போய், முயற்சியைக் கைவிட்டிருப்பார்களென்றால், இன்று நம்மால் ஆகாயத்தில் பயணம் செய்ய முடியுமா? தோல்வியைக் கண்டு அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் தொடர்ந்து பரீட்சை நடத்தினார்கள். வெற்றியின் பாதையில் காலை—இல்லை, இல்லை—இறக்கையை வைத்தார்கள்!

தோல்வியைப் பரிசோதிக்கும் போது, பின்னோக்கிய பார்வை அவ்வளவு பயன் தராது. முன்னோக்கிய பார்வையாகவே இருக்கவேண்டும். இனி வரப் போகும் பிழைப்புக்கு தோல்வி எவ்வளவு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பதையே அறியப் பிரயாசைப்பட வேண்டும். இயற்கை அன்னை தனது இரகசியங்களையெல்லாம் தோல்வி என்னும் போர்வை அடுக்குகளால் சுற்றிப் பொதிந்து வைத்திருக்கிறாள். அவற்றைப் பிரித்தெடுத்து வருகிறவர்களுக்குத்தான் கைமேல் பலன் தருவாள்.

தோல்வி ஒரு முடிவு அல்ல. வெற்றிப் பாதையில் அமைந்திருக்கும் ஒரு கட்டமே. வரப் போகும் வெற்றிக்கு ஒரு முன் அடையாளம் என்றுங் கூடச் சொல்லிவிடலாம். மனிதன் ஆசித்ததையும், அவன் அடைந்ததையும் சீர்தூக்கிப் பார்த்தால், சகலமும் தோல்வியாகவே நமக்குப் புலப்படலாம். எனவே உலகத்தில் சித்தி பெற்ற ஒருவன் தனது வாழ்வு தோல்வியே என்று

---

(55-ம் பக்கத் தொடர்ச்சி)

காவேரிக் கரைகளில் வாழ்ந்த மன்னர்கள் மறைந்தார்கள். அதன் கரைகளில் அவதரித்த மகான்களின் கீர்த்திதான் நிற்கிறது. ஆனால், காவேரித் தாய் அன்று போல் இன்றும் அண்டினவரின் பாபத்தைப் போக்கி அவர்களுக்கு அமுதையும் ஊட்டிக் கொண்டே இருக்கிறாள்.

வாழி காவேரி!

— 'தினமணி சுடர்'

எண்ணினாலும் எண்ணலாம். அதே சமயத்தில், தோல்வியுற்ற ஒருவன் தான் வெற்றியடைந்து விட்டதாக நினைத்துக்கொள்ளக் கூடும். ஆசையும் ஆவலும் இல்லாதவன் கொஞ்சத்தில் வெற்றி காண்பது ஆச்சரியமல்ல. எனவே ஒருவனுடைய வெற்றியையும் மற்றவனின் தோல்வியையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் அர்த்தம் ஒன்றுமில்லை.

முதன் முதல் காடுகளில் புகுந்து வழி வகுக்கப் பிரயாசைப்பட்டவர்களில் பெரும்பாலோர் தங்களுடைய முயற்சியின் கடைசிக் கட்டத்தைக் காணாமலே இறந்தார்கள். வழியருகே அவர்களுடைய எலும்புக் கூடுகள் இடம் பெற்றன. இதனாலேயே அவர்கள் தோல்வி அடைந்துவிட்டார்களா? இல்லை. இவர்களுடைய தோல்வியே மற்றவர்களுடைய வெற்றிக்குக் காரணமாயிருந்தது. பின்னால் வந்தவர்கள் முன்னவர்களுடைய அனுபவத்தை உபயோகப்படுத்திக் கொண்டு வெற்றி பெற்றார்கள். ஆகையால் வெற்றியை விட மகிமை வாய்ந்த அநேக தோல்விகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தியாவைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று கொலம்பஸ் கப்பலேறிப் பயணப்பட்டார். ஆனால் இந்தியாவின் எல்லையை அவர் காணவில்லை. இக்காரணத்தினாலேயே அவருடைய முயற்சிக்குத் தோல்விப் பட்டம் கட்டிவிட முடியுமோ?

நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டுபிடிக்க லிவிங்ஸ்டன் புறப்பட்டார். அதைக் காணும் முன்னதாகவே மரணம் அவரைப் பறித்துக் கொண்டு போயிற்று. எனினும் அவர் முயற்சி வெற்றியே; போல்வி அல்லவே அல்ல.

சித்திரக்காரன் ஒருவன் கண் காட்சிக்காக அழகான படம் ஒன்று தீட்டினான். அதை அங்கு அனுப்பி வைக்கிற சமயம், படத்தின் நீல நிற வானில் மூன்று இடங்களில் மாசு காணப்பட்டது. அவைகளை அழித்துப் போட முடியவில்லை. சித்திரக்காரனின் கை அவற்றை என்ன செய்தது, தெரியுமா? மூன்று பறக்கும் குருவிகளாக அவற்றை மாற்றி விட்டது. கண் காட்சியைப் பார்க்க வந்தவர்கள் வானில் பறந்த இந்த மூன்று குருவிகளைப் பார்த்து வியந்தவாறு நின்றார்கள். ஆனால் அவைகள் மூன்று குறைகளை மறைத்துக்கொண்டிருந்தன என்பதை எவரும் அறிந்திலர். வாழ்க்கைத் தோல்விகளை வெற்றிச் சின்னங்களாக மாற்றும் வித்தையைக் கற்றுக் கொள்வது மிகவும் அவசியம் அல்லவா?

—**நல்வழி**

# குழந்தை வளர்ப்பு

[“நளினி”]

பொன்னுடையரேனும், புகழுடையரேனும், மற்றென்னுடையரேனும் உடையரோ? இன்னடிசில் புக்களையும் தாமரைக்கைப்பூ நாறும் செய்யவாய் மக்களை இல்லாதவர், ‘குழலினிது, யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்’, என்றும் குழந்தைகள் பேச்சிலும், விளையாட்டிலும், பெற்றோர்கள் அடையக்கூடிய ஆனந்தத்தைச் சிலாகித்து கவிஞர்கள் பல எழுதியுள்ளார்கள். குழந்தைகள் விளையாட்டைக் கண்டு இன்புறுவதுடன், அவர்கள் சரீரத்திற்கும், மனத்திற்கும், ஏற்ற முறைகளில் போஷணை செய்யும் பொறுப்பும், பெற்றவர்களைச் சார்ந்ததே. அதிலும், ‘தொட்டிலை ஆட்டும் கையே அகிலத்தை ஆளுகின்றது’, என்பதற்கேற்ப, இந்த பொறுப்பு சிறு பிராயத்தில், முற்றிலும், தாயைச் சார்ந்தது. சிறு வயதிலேயே, குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்பிக்க வேண்டும். அதுவே, அவர்கள் பிற்காலத்தில் சீருடன் வாழ்வதற்கு, ஒரு முக்கிய ஏதுவாகும்.

குழந்தைகள் பிறந்த நாள் முதல், ஆகாரம், நித்திரை முதலிய விஷயங்களில் ஒழுங்கான பழக்கங்களை [illegible] ரம் கொடுத்தால் அஜீரணம், வாந்தி, மலச் சிக்கல், வயிற்றுவலி போன்ற வியாதிகள் வரும். மேலும், குழந்தைகளின் ஜீரணக் கருவிகள் யாவும் ஒன்பது மாதம் வரை மிகவும் மென்மையாக இருக்கின்றன. அதனால் குழந்தையைக் கவனித்து கருத்துடன் ஆகாரம் கொடுக்க வேண்டும்.

குழந்தை பிறந்த முதல், சில மாதங்களுக்கு அதன் தாயின் பாலே சிறந்த ஆகாரமாகும். பால் புகட்டும் தாய், தன் உடல் நலத்தை நன்றாகக் கண்காணித்துக்கொண்டால் குழந்தை ஆரோக்கியமாகவும், புஷ்டியாகவுமிருக்கும்.

முதலாவதாக, தாய் ஆரோக்கியமாகயிருப்பதற்கு, அவள் ஒவ்வொரு இரவும் குறைந்தது, ஆறு மணி நேரமாவது நன்றாக உறங்க வேண்டும். அதனால் குழந்தைகளுக்கு இரவு வேளைகளில் பால் கொடுக்கும் பழக்கத்தை அறவே நிறுத்த வேண்டும். சாதாரணமாக நல்ல தேகஸ்திதியிலுள்ள குழந்தைகளுக்கு இரவில் ஆகாரம் தேவையிருக்காது. தாய்க்குத் தினமும் தூக்கம் சரியாக வரவில்லையானால் டாக்டரைக் கலந்தாலோசிப்பது நலம்.

இரண்டாவதாக, இஷ்டப்படி கண்ட ஆகாரங்களை அகால[illegible]

களில் உண்ணக்கூடாது. பத்தியமாகவும், விரைவில் ஜீரணமாகும் உணவையே உட்கொள்ள வேண்டும். அதிக காரமோ, அதிகப் புளிப்போ, வாசனை பொருள்களோ, ஆகாரத்தில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. அப்படி உண்டால், அஜீரணம், வயிற்று வலி, மலச்சிக்கல் போன்ற வியாதிகளினால் அவதிப்பட நேரிடும். தாயின் பாலின் தரமும் குறைந்து போகும், குழந்தையையும் பாதிக்கும். மேற்கூறிய வியாதிகளில், ஏதாவதொன்றில் தாய் கஷ்டப்பட்டால், Mist. Bismuth Pepsin (atlab) என்னும் மருந்தை உபயோகிககலாம்.

ஜலதோஷம் பிடித்துக்கொள்ளாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வீட்டில் யாருக்காவது ஜலதோஷம் என்றால், அவர் குழந்தையின் அருகில் வராமல் தடுக்க வேண்டும். அது தொத்து நோய். விரைவில் குழந்தைக்கும் உண்டாகும். பிறகு அதைக்கொண்டு பிராங்கைடிஸ் (Bronchitis), நிமோனியா (Pneumonia) போன்ற ஜுரங்கள் வரக்கூடும். மேலும், தாய் சுத்தமான காற்றைப் போதிய அளவு சுவாசித்தல் வேண்டும். கூட உடற்பயிற்சியும் தேவை. அதனால் காலையிலாவது, மாலையிலாவது உலவுதல் சாலவும் நன்று. கீரை வகைகள் சாப்பிடுவதும் நல்லது.

## குழந்தைக்கு ஆகாரம் கொடுக்கும் முறை

சாதாரணமாகப் பிறந்து 36 மணி நேரம் வரை குழந்தைகளுக்கு உணவு தேவையில்லை. வேண்டுமானால் குளுகோஸ்-டி (Glucose-D) தண்ணீர் அல்லது தேனை தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். முதல் நான்கு மாதங்களுக்கு, மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை, காலை ஐந்து மணியிலிருந்து இரவு பதினொன்று மணி வரையில் குழந்தைக்குப் பால் புகட்டலாம். ஐந்தாவது மாதத்திலிருந்து, நான்கு மணி நேர இடைவேளையுடன் காலை ஆறிலிருந்து இரவு பத்து மணி மட்டும் ஆகாரம் கொடுக்கலாம். எக்காரணங் கொண்டும் நேரம் கடந்து பால் புகட்டக் கூடாது. இவ்வளவு மணிக்கு ஒரு தடவையென்று நிச்சயித்து ஒழுங்காக உணவு கொடுக்க வேண்டும். சில சமயங்களில் தூங்கும் குழந்தையையும் எழுப்பிக் கொடுக்க நேரிடும்.

தாயின் தேக நிலை மோசமாகயிருந்தாலும் அல்லது அவளிடம் குழந்தைக்குப் போதுமான அளவு பால் இல்லையென்றாலும் பசும்பால் Oster milk, Glaxo, Cow & Gate போன்ற கருத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள குழந்தைகள் ஆகாரம், குழந்தைகளுக்குப் புகட்டுவதற்குச் சிறந்ததாகும்.

குழந்தை மெலிந்துகொண்டு, எப்போதும் பசியுடனிருந்தால்



அதற்குப் போதிய அளவு உணவு கொடுக்கப்படவில்லை என்று ஊகிக்கவேண்டும். திருப்தியாக உண்டும், எடையில் ஏறமலும், இறங்காமலுமிருந்தால் பாலின் தரம் மட்டமென்று கருதவேண்டும். ஆரோக்கியமான குழந்தை ஒவ்வொன்றும், ஒவ்வொரு வாரமும் ஆறு அவுன்ஸ் எடையில் ஏறும்.

வைடமின் C நிறைந்த ஆரஞ்சுப் பழத்தின் ரசத்தைக் குழந்தைகளுக்கு இரண்டாம் மாதத்திலிருந்து கொடுப்பது நல்லது. பாதிப் பழ ரசத்துடன், அதன் சம பங்கு தண்ணீர் கலந்து தினம் இரு முறை கொடுக்கலாம். தக்காளிப் பழ ரசமும் சிறந்தது. ஆகாரத்திற்கு இடையிடையே சுத்தமான தண்ணீர் குடிப்பதற்குக் கொடுத்துவரலாம். சில சமயங்களில், பசியின்றித் தண்ணீர் தாகத்திற்காகவே குழந்தை அழும். அஜீரணம் ஏற்படாமல் இருப்பதற்கு Gripe Mixture கொடுக்கலாம்.

குழந்தைக்குத் தாய்ப்பாலின்றி, இதர பால் வகைகள் புகட்டுவதற்கு பால் புட்டி (Feeder) என்ற புட்டியை உபயோகிக்கலாம். அப்புட்டியைக் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கு முன்பும், பின்பும் நன்றாக பிரஷ்கொண்டு அலம்பவேண்டும். பிறகு, பாலை நிரப்புவதற்கு முன், வெந்நீரில் கழுவவேண்டும். குழந்தைகள் புட்டியிலிருந்து பால் சப்புவதற்கான ரப்பர்களையும், (teats) உபயோகிக்கும் முன், கொதிக்கும் தண்ணீரில் சுத்தம் செய்யவேண்டும்.

குழந்தைக்கு ஒரு பல் முளைக்கும் வரையிலாவது, தாய் அதற்குப் பால் கொடுக்க வேண்டும். குழந்தை மிகவும் பலஹீனமாக இருந்தால் அல்லது நோய் வாய்ப்பட்டிருந்தால், குழந்தை நன்றாக தேறும் மட்டும் தாய்ப்பால் குழந்தைக்கு அவசியம். குழந்தைக்குப் பத்து மாதம் ஆகிவிட்டால் தாய்ப்பாலை நிறுத்திவிடலாம். அதற்குக் கொஞ்சம் கொஞ்சமாக, அதாவது ஒரு வேளை தாய்ப்பாலை நிறுத்திவிட்டுப் பதிலுக்கு இதரப் பால் ஆகாரம் கொடுக்கவேண்டும். பிறகு, இரண்டு, மூன்று முறைகள் என்று தொடர்ந்து, அடியோடு தாய்ப்பாலை நிறுத்திவிடவேண்டும். பல் முளைக்கும் தருணத்தில் தாய்ப் பாலை நிறுத்தக் கூடாது.

90 நாட்கள் வரையில், பிறந்த குழந்தைகள் ஏறக்குறைய 24 மணி நேரமும் உறங்கிக் கொண்டேயிருக்கும். வேளா வேளைக்குப் பால் புகட்டிப் படுக்க வைத்தால் மறுபடியும் தூங்கும். சின்னஞ் சிறு சிசுவால் என்ன செய்ய இயலும்? திரும்ப முடியுமா? புரள முடியுமா? தாய்தான் தன் பாலகனை, இப்படியும் அப்படியுமாக அவ்வப்போது திருப்பிப் படுக்கவைக்கவேண்டும். ஐந்தாறு மாதங்கள் ஆன பின், குழந்தை கொஞ்ச நேரம் விழித்துக்கொண்டிருக்கிறது. கையை

யும், காலையும் ஆட்டி 'அ, ஊ' வென்று சத்தமிட்டு யாவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க விடுகிறது. சாதாரணமாக ஒரு குழந்தைக்குப் பத்து வயது ஆகும் வரை பதினெட்டிலிருந்து பத்து மணி நேர தூக்கமாவது அவசியம். முட்டி போடும் பிராயத்திலிருந்து ஒரு வயது வரை பகலில் குழந்தை இருமுறை உறங்கவேண்டும். பிறகு, நான்கு ஐந்து வயது மட்டும் ஒரு முறை தூங்கினால்போதும் எப்போதும் குழந்தையைத் தனியே ஒரு கட்டிலில் கொசு வலை கட்டிப் படுக்கச் செய்யவேண்டும். தாயின் அருகிலேயே கிடத்திக்கொள்ளக் கூடாது. கொசுக் கடியினால் உண்டாகும் மலேரியா, டெங்கு போன்ற விஷ ஜுரங்களிலிருந்து கொசு வலையினால் குழந்தையைக் காக்கலாம்.

குழந்தைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். 'சுத்தம் சோறுபோடும்', 'சுத்தமே சுகாதாரம்' என்பதை அவர்கள் மனதில் பதிய வைக்கவேண்டும். குழந்தைகள் மென்மையாகயிருப்பதால், அழுக்கு உடம்பில் படிந்ததும், சிசுவுக்கு ஒரு விதமான எரிச்சலை உண்டாக்கும். அதனால் குழந்தைக்குத் தினம் தவறாமல். உடம்பிற்குத் தண்ணீர் ஊற்றுவது நன்று. கதகதப்பான வெந்நீரில் குளிப்பாட்டவேண்டும், சோப்பு தவட்டுவதற்குத் துணி, யாவும் முன்னதாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். அதிக நேரம் குழந்தையைத் தண்ணீரில் வைத்திராமல், விரைவில் குளிப்பாட்டி விடவேண்டும். பிறகு உடம்பைத் துடைத்து, டால்கம் பவுடர் ஏதாவது தேகத்தில் ஒத்தி, ஆடை அணிவிக்கவேண்டும். எப்போதும் மெல்லிய துணிகளில் குழந்தைகளுக்குச் சட்டைகள் தைப்பது நலம்.

காலையிலும், மாலையிலும் தவறாமல் குழந்தை மலத்தை வெளிப்போக்கவேண்டும். தாய்ச்சொற்படி, பணிந்து நடக்கும்படி குழந்தைகளைப் பழக்க வேண்டும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்', 'இளமையிற் பழக்கம் முதுமையிற் சுவாபம்'. சிறு பிராயத்திலேயே நற்பழக்க வழக்கங்களை நம் செல்வங்களுக்குப் புகட்டினால் பிற்காலத்திலே, பெற்றோர்களுக்கும், நாட்டிற்கும் பாரமாயிராமல் சிறப்பாக வாழ்வார்கள்.

## ஆகாரத் திட்டம்

முதல் மாதம் — தாய்ப்பால். இரண்டாம் வாரத்திலிருந்து இரண்டு துளி *Vitamin A & D drops (Codliver Oil).*

இரண்டாம் மாதம்—தாய்ப்பால், ½ *teaspoon* ஆரஞ்சு பழ ரசம், மூன்று துளி *Vitamin A & D drops*



மூன்றும் மாதம்—தாய்ப்பால், பழரசம் 1 *teaspoon*, மீன் எண்ணெய் ½ *teaspoon.*

நான்காம் மாதம்—தாய்ப்பால், பழ ரசம் 2 *teaspoon*, மீன் எண்ணெய் 1 *teaspoon Vegetable soup, 2 spoons.*

ஐந்தாம் மாதம்—தாய்ப்பால், ராகிமால்ட் (***Ragi Malt***) வீட்டில் தயாரித்தது, பழ ரசம், மீன்னெண்ணெய், அரிசிக் கஞ்சி, பசும் பால்.

ஆறும் மாதம்—தாய்ப்பால், பசும் பால், பழ ரசம், தக்காளி ரசம், பிஸ்கேட், வாழைப்பழம், மீனெண்ணெய்.

ஏழாம் மாதம்—தாய்ப்பால், பசும் பால், பழ ரசம், தக்காளி ரசம், எலும்பு சூப்பு, (***Mutton Soup***), பிஸ்கேட் , வாழைப்பழம், பருப்பு, கீரை. உருளைக் கிழங்கு.

எட்டாம் மாதம்—பசும் பால், எல்லாவித ஆகாரங்களும் ***A, B, C***, வைட்டமின்கள் நிறைந்ததாக இருக்கவேண்டும். இரவில் அஜீரணிக்கக் கூடிய உணவுகள் கொடுக்கக்கூடாது. தயிர் கொஞ்சம் காலை ஆகாரத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

ஒன்பதாம் மாதத்திலிருந்து பன்னிரண்டு மாதம் வரை—சாதாரண ஆகாரம்.

— "சௌபாக்கியம்."

---

[illegible] கதிர்

'உழைத்[illegible]வாழு' என்ற உத்தம இலக்கண [illegible]ாதனையை ஊட்டும் விழா, உ[illegible]ம் பெருமையை உணர்த்தும் [illegible], அறுவடைத் திருவிழா, பெ[illegible] புதுநாள் எனும் தமிழர் விழா.

[illegible] தரும் [illegible]ல்வத்தின் [illegible] [illegible]ன் கட்டி[illegible] போத[illegible] மலிகின்றன. [illegible] [illegible]யும் தரும் உழவன் முழு வாழ்வு வாழ்வதில்லை.

உழுதுண்டு வாழ்வானே வாழ்வான் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவன் என்ற முறையில் நாட்டைத் திருத்தி அமைப்போர் அமைத்தால் வாழ்வே திருநாளாகும். அட்டியில்லை.

மக்கள் மன்றத்திலிருந்து கிளம்பும் புரட்சி, பல நூறு [illegible]களின் கூட்டு பலத்தைவிட வன்மை மிக்கது. பெரியதோர் புயல், மக்களின் கோபம்!

வாழ்க்கைக்கு ஒரு சிறந்த, தக்க, துணை தேடிக்கொள்ளும் முறையே திருமணம் இதிலே சாத்திரமும் கோத்திரமும் ஏன் குறுக்கிட வேண்டும்?

தாய் நாட்டின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு பணிபுரி பவனே வீரன்—விவேகி.

நம் நாட்டில் சமுதாய சமத்துவம் ஏற்பட வேண்டுமானால், இங்கு ஜில்லா தோறும், ஊர்தோறும், ஒரு சன்–யாட்–சென் தோன்ற வேண்டும்.

மக்கள் கல்லறை புகுவர். ஆனால் அவர்கள் மனதில் குறியேறிய மாண்பு மிகு கருத்துகள் கல்லறை புகமாட்டா. அவை என்றும் நின்று நிலவும்.

மலைகண்டு, நதிகண்டு, மாநிதிகண்டு அல்ல ஒரு நாட்டை உலகம் மதிப்பது! அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும்.

186324

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN
the 'Venkatesan Press,' 2-65, Broadway, Ma[illegible]


வீரபாண்டியன் தமிழ் வாசகம்

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1–2–0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

எஸ். எஸ். அருணகிரிநாதர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 29 | 19–5'–54 |

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

M. விவேகானந்தா, B. Sc., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 9 | 10–4–'57 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 9 | 10–4–'57 |

இந்த மூன்று புத்தகங்களை வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்

புதிய தேச ஆட்சி முறை

D. சிவசங்கர ராவ், B. A., L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| [illegible]ன்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 11 | 4–4–'56 |
| [illegible] வகுப்பு | 0 | 8 | 0 | 10 | 4–4–'56 |

[illegible]ன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டு[illegible] அனுப்பவும்.